Registered as a Newspaper

புதன்பொய்கை

# உதயன்

சுடர் : 41
கதிர் : 28

புதன்கிழமை
24 டிசெம்பர் 2025

மார்கழி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50



# ஜெய்சங்கரிடம் சமஷ்டியை வலியுறுத்தவில்லை தமிழரசு

## கஜேந்திரகுமார் எம்.பி. பகிரங்கக் குற்றச்சாட்டு

**கொழும்பு, டிசெம்பர் 24**

**இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம், இலங்கைத் தமிழரசுக் கட்சியும், ஜனநாயகத் தமிழ்த் தேசிய முன்னணியும் சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்தவில்லை - இவ்வாறு நாடாளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற் றஞ்சாட்டியுள்ளார்.**

»15

# அத்துமீறிய மீன்பிடி; 12 மீனவர்கள் கைது



மன்னார், டிசெ. 24
இலங்கையின் கடற்பரப்புக்கு அருகாக உள்ள பகுதிகளில், அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீன வர்கள் 12 பேர் நேற்றுக் கைது செய் யப்பட்டுள்ளனர்.
தனுஷ்கோடி மற்றும் தலை மன்னார் கடற்பரப்புக்கு

»15

# அர்ச்சுனா எம்.பி.க்கு எதிராகப் பிடியாணை

கொழும்பு, டிசெ. 24
நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா வைக் கைது செய்யுமாறு, கோட்டை நீதவான் நீதிமன் றம் நேற்றுப் பிடியாணை உத்தரவைப் பிறப்பித்துள் ளது. பொலிஸாரின் கட மைக்கு இடையூறு ஏற் படுத்தினார் என்ற குற்றச் சாட்டின் கீழ், அர்ச்சுனா எம்.பி.க்கு எதிரான வழக் கொன்று கோட்டை

»15

# மயங்கி வீழ்ந்து சிறுமி திடீர்ச்சாவு

முல்லைத்தீவு, டிசெ. 24
முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த சிறுமி யொருவர் முள்ளியவளை - மாஞ்சோலை மருத்துவமனையில் சிகிச்சையின்போது


»15

# பலாலி விமான நிலையத்தில் துரித அபிவிருத்தி அவசியம்

## ஜெய்சங்கரிடம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 24
பலாலி விமான நிலையத் தில், விரிவான அபிவி ருத்தி அவசியம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் சுட்டிக் காட்டியுள்ளார்.
ஜெய்சங்கருக்கும், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக் கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்

»15



## யாழ். நகர்ப் பகுதிகளில்

# போதைப் பொருள்களுடன் பத்து இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 24
யாழ்ப்பாணம் நகரப் பகுதி யில், போதைப்பொருள் களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட் டில் ஒரு பாடசாலை மாண வன் உட்பட 10 பேர் கைது

»15

# இடர் மீட்பு உதவியாக 450 மில்லியன் டொலர்

## தாராளம் காட்டுகின்றது இந்தியா

கொழும்பு, டிசெ. 24
இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் பணிகளுக்காக இந்தியாவிடமிருந்து 450 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கப்படும் என்று, இந்திய வெளி விவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரி வித்தார். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் நேற்றுமுன்தி னம் மாலை இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அமைச்சர் ஜெய்சங்கருக்கும், ஜனாதிபதி அநுர வுக்கும் இடையிலான கலந்துரையா டல் நேற்று நடைபெற்றது. இதன் போதே, இந்தியாவின் உதவித்திட்டம் தொடர்பான தகவலை ஜெய்சங்கர் வெளியிட்டார்.
இலங்கைக்கு சாத்திய மான அனைத்து உதவி

»15

# பெருமளவு ஹெரோய்னுடன் இரு சந்தேகநபர்கள் கைது



'எங்களை நக்குண்டாராக்கி நாவிழக்க வைக்கத்தான் இப்பிடி அள்ளிக்குடுக்கினம் கண்டியளோ'

முச்சந்தி முரளி

யாழ்ப்பாணம், டிசெ. 24
தெல்லிப்பழைப் பகுதி யில் பெருமளவு ஹெரோய்னை உடை மையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு சந் தேகநபர்கள் கைது செய்

»15

**தங்கம் விலை அதிகரிப்பு**

விரிவு பக்கம்:-05

# ரயிலுடன் மோதுண்டு ஒருவர் பரிதாபச் சாவு

## பாதுகாப்பான கடவைகோரி மக்கள் போர்

கிளிநொச்சி, டிசெ. 24
காங்கேசன்துறையில் இருந்து புறப்பட்ட யாழ்தேவி ரயிலுடன் மோதுண்டு குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று உயிரிழந்தார். முகமாலைப் பகுதியில் இந் தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

»15

# இந்துக்களுக்கு உள்ள சுதந்திரம் பௌத்தர்களுக்கு இல்லையாம்!

## முன்னாள் அமைச்சர் இந்திக்க கொதிப்பு



கொழும்பு, டிசெ. 24
இலங்கையில் இந்துக்களுக்கு உள்ள சுதந்திரம் பௌத்தர்க ளுக்கு இல்லை என்று முன் னாள் அமைச்சர் இந் திக்க அனுருத்த காட்ட மாகத் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் திஸ்ஸ விகாரை தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியா லயத்தில் நேற்று விசேட ஊடகவிய லாளர் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது, முன்னாள் அமைச் சர் இந்திக்க அனுருத்த மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி அநுர தலை

»15

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 23.12.2025 | திகதி 23.12.2025 | திகதி 23.12.2025 | திகதி 23.12.2025 | திகதி 23.12.2025 | திகதி 23.12.2025 | திகதி 23.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4294 | சீட்டிழுப்பு இலக்கம் 1361 | சீட்டிழுப்பு இலக்கம் 0320 | சீட்டிழுப்பு இலக்கம் 2400 | சீட்டிழுப்பு இலக்கம் 6052 | சீட்டிழுப்பு இலக்கம் 2082 | சீட்டிழுப்பு இலக்கம் 0168 |
| ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கினம் ரிஷபம் | ஆங்கில எழுத்து C | ஆங்கில எழுத்து N | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கினம் தனு |
| | | | சுப்பர் இலக்கம் 05 | | | |
| வெற்றி இலக்கங்கள் 04 22 74 79 | வெற்றி இலக்கங்கள் 17 40 45 49 | வெற்றி இலக்கங்கள் 3 1 0 2 | வெற்றி இலக்கங்கள் 33 53 67 75 | வெற்றி இலக்கங்கள் 9 0 2 5 0 7 | வெற்றி இலக்கங்கள் 11 39 45 57 | வெற்றி இலக்கங்கள் 02 08 14 |
| விசேட எழுத்து N | | | | | விசேட எழுத்து J | |

# தையிட்டியில் பொலிஸாரின் செயல் நாட்டிலுள்ள பிளவையே காட்டுகிறது

## வி.மணிவண்ணன் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், டிசெ.24**

**தையிட்டியில் பொலிஸார் நடந்துகொண்ட விதம், நாடு இரண்டாக பிளவுபட்டுள்ளது என்பதையே வெளிக்காட்டுகின்றது என்று தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தையிட்டி விகாரை முன்பாக நடைபெற்ற அமைதிவழிப் போராட்டத்தின் போது, பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தி அங்கு அமைதியின்மையை ஏற்படுத்தி இருந்தனர்.

பொலிஸாரின் அராஜகத்தை தமிழ் மக்கள் கூட்டணி மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

திருகோணமலையில் புத்தர் சிலையை வைத்தமை தொடர்பிலான பிரச்சினையின்போது பௌத்த பிக்கு ஒருவர் பொலிஸ் அதிகாரியை கன்னத்தில் அறைந்தார். அதற்கு எதிராக பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்காது அமைதி காத்தனர். இது நாடு இரண்டாக பிளவுபட்டுள்ளமையையே காட்டிநிற்கிறது. எத்தனை ஆட்சிகள் மாறினாலும் , சிங்கள பௌத்த தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

வேலன் சுவாமி, வலி. கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர், வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோர் தம் மீது பொலிஸார் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவத்துக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டும் என எதிர்பார்க்கிறேன். பொலிஸாருக்கு எதிராக வழக்குத் தொடர விரும்பின், சட்டத்தரணி என்ற ரீதியில் நாமும் எமது கட்சியும் பக்கபலமாக அவர்களுக்கு நிற்போம் என இந்த இடத்தில் உறுதி கூறுகிறேன். அதேபோன்று தையிட்டி விகாரையில் நடைபெறும் சட்ட விரோதக் கட்டடங்களுக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறேன்- என்றார். (எ-26)

**சுபிரி தன சம்பத**
திகதி 23.12.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம் 0760
ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கம் 8 5 6 2 2 6

**Super Ball** DLB
திகதி 23.12.2025 | தினம் செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3026 | ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கம் 09 11 41 75

**சனிதா** DLB
திகதி 23.12.2025 | தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கம் 09 17 33 68 | வெற்றி வாரம் 5187

**SASIRI** DLB
திகதி 23.12.2025 | தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0856 | வெற்றி இலக்கம் 11 13 37

**லக்ன ராசி** DLB
திகதி 23.12.2025 | தினம் செவ்வாய்க்கிழமை
ரிஷபம் | வெற்றி இலக்கம் 05 35 44 62 | சீட்டிழுப்பு வாரம் 4738

**KAPRUKA** DLB
திகதி 23.12.2025 | தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து G | சுப்பர் இலக்கம் 16 | வெற்றி இலக்கம் 03 05 18 34 | வெற்றி வாரம் 2202

**அத கோடிபதி** DLB
திகதி 23.12.2025 | தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 11 12 37 67 | வெற்றி வாரம் 2852

# தே.ம.சக்தி அரசின் அராஜகத்துக்கு கொழும்பு மாநகரசபையில் முடிவு

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.24

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயலுக்கு கொழும்பு மாநகரசபையில் முடிவு கட்டப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கட்டுப்பாட்டில் உள்ள கொழும்பு மாநகரசபையின் வரவு-செலவுத் திட்ட முன்மொழிவு, 3 வாக்குகளால் தோல்வியடைந்துள்ளது. இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கொழும்பு மாநகரசபை மேயர் தெரிவின்போது பகிரங்க வாக்கெடுப்பை கோரி இருந்தோம். ஆனால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, மோசடியான முறையில் ஆட்சியைப் பிடித்தனர். தேசிய மக்கள் சக்தியின் இந்த ஜனநாயக விரோதச் செயலை கூட்டு எதிரணியாக இன்று நாம் தோற்கடித்துள்ளோம். தேசிய மக்கள் சக்திக்கு கொழும்பு மாநகரசபையில் இனி ஆட்சி அதிகாரம் இல்லை. கூட்டு எதிரணி வசமே அதிகாரம் உள்ளது என்பதையும் குறிப்பிடுகின்றோம்- என்றார். முஜிபுர் ரஹ்மான் இவ்வாறு கூறினாலும், உள்ளூராட்சி கட்டளைச் சட்டத்தின்படி மீண்டும் வரவு-செலவுத் திட்டத்தை முன்வைக்கமுடியும். 14 நாள்களுக்குள் இதனை செய்வதற்கு அதிகாரம் உள்ளது.

இரண்டாவது தடவையும் பாதீடு தோற்கடிக்கப்பட்டால், வரவு - செலவுத் திட்டத்தை அங்கீகரிக்கும் அதிகாரம் துறைசார் அமைச்சருக்கு உள்ளது என்றும், சபை நிறுவப்பட்டு ஈராண்டுகளுக்கு ஆட்சி அதிகாரம் தொடர்பில் சர்ச்சை எழாது எனவும் கூறப்படுகின்றது. (எ-44)



# தடுப்பூசியால் ஏற்பட்ட உயிரிழப்பு முறையான விசாரணை அவசியம்

## வலியுறுத்துகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, டிசெ.24

தரமற்ற தடுப்பூசி பயன்படுத்தப்பட்டுள்ளதால் இருவர் உயிரிழந்துள்ளனர். இதுதொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

குமட்டல், வாந்தி மற்றும் தலைச்சுற்று என்பனவற்றைக் குறைப்பதற்கும் தடுப்பதற்கும் கொடுக்கப்பட்ட தடுப்பூசிகளில் நச்சுத்தன்மை ஏற்பட்டதால் இருவர் உயிரிழந்துள்ளனர். ஹபரகட மற்றும் மத்துகம பகுதிகளைச் சேர்ந்த இரு பெண்களே ஐ.டி.எச். மருத்துவமனையில் கடுமையாக சுகவீனமுற்று இறுதியில் இவ்வாறு உயிரிழந்தனர்.


கண்டி மருத்துவமனையில் நடத்தப்பட்ட முதற்கட்ட நுண்ணுயிரியல் பரிசோதனையில் இந்தத் தடுப்பூசிகளில் பக்டீரியாக்கள் இருப்பது தெரியவந்துள்ளது என அறியமுடிகின்றது. அதையடுத்து மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, மருத்துவமனைக் கட்டமைப்பிலிருந்து 2 இலட்சத்து 70 ஆயிரம் இறக்குமதி செய்யப்பட்ட தடுப்பூசிகளை திரும்பப் பெற்றுள்ளது. இந்தத் தகவலின் உண்மைத்தன்மையை சுகாதார அமைச்சரும் அரசாங்கமும் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். இந்தத் தடுப்பூசிக் கொள்வனவு அவசர கொள்வனவா? இதன் தரம் பரிசோதிக்கப்பட்டதா? அவ்வாறு மேற்கொண்ட பரிசோதனைகளின் முடிவுகள் எத்தகையன என்பது தொடர்பில் எமக்குத் தெளிவுபடுத்தல் அவசியம்-என்றார். (எ-44)

# இலங்கையின் மூத்த நடிகர் எதிரிசிங்க மறைவு

கொழும்பு,டிசெ.24

இலங்கையின் மூத்த நடிகர் சதிஷ்சந்திர எதிரிசிங்க நேற்றுக் காலை தனது 84ஆவது வயதில் காலமானார். பிரபல பாடகர் சுனில் எதிரிசிங்கவின் சகோதரரான, சதிஷ்சந்திர எதிரிசிங்க, சினிமா மற்றும் தொலைக்காட்சி நாடகங்களில் நடித்துள்ளார்.

உடல்நலக்குறைவு காரணமாக கொழும்பில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் அவர் காலமானார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையிட்டி போராட்டக்காரர்களுக்கு பொலிஸாரால் கடும் சித்திரவதை

## வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு முறைப்பாடு

**யாழ்ப்பாணம்,டிசெ.24**
**தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக, அமைதி வழியில் போராடியவர்களைப் பொலிஸார் கடுமையாகச் சித்திரவதை செய்துள்ளனர். இந்தப் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில், நீதியான அனுகுமுறைகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் ரீதியிலான நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பை எதிர்த்த வேளை, இடம்பெற்ற தாக்குதல் என்பதால், இதற்கு ஒருபோதும் நீதி கிட்டாது என்பதை நாம் உணர்கின்றோம். அரச கொள்கையும், சட்டங்களும், சட்ட அமுலாக்கமும் பௌத்த சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்புக்கு வலுச்சேர்ப்பவையாகவே பேணப்படுகின்றன.
நீதிமன்றின் உத்தரவுகளை மதித்தே நாம் போராடினோம். எனவே எம் மீது பொலிஸார் பிரயோகித்த சித்திரவதைகள் தொடர்பாக, இலங்கையில் உள்ள பிரதான நாடுகளின் வெளிநாட்டுத் தூதரகங்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான நிறுவனங்கள், சித்திரவதைக்கு எதிரான சர்வதேச ஸ்தாபனங்கள், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள மனித உரிமை நிறுவனங்கள் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களும் தலையிடவேண்டும். இதுதொடர்பில் ஆதாரங்களுடன் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது- என்றுள்ளது. (க-இ)



# சத்தியக்காட்டுச் சந்தையில் கடைத்தொகுதிக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.24
சத்தியக்காட்டுச் சந்தையில் கடைத்தொகுதியை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வலி. மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன் தலைமையில் நடைபெற்றது. செயற்றிறன் அடிப்படையிலான மூலதன மானியங்களை வழங்குதல் திட்டத்தின்கீழ், சத்தியக்காட்டுச் சந்தையில் வாழ்வாதார உதவியை மேம்படுத்தும் நோக்கில் இந்தக் கட்டடத்தொகுதி அமைக்கப்படவுள்ளது.
நிகழ்வில் வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன், செயலாளர் பாலரூபன், பிரதேசசபையின் உறுப்பினர்கள், பிரதேசசபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27)

# சாவகச்சேரி நகரசபை பட்ஜெட் நிறைவேற்றம்

சாவகச்சேரி,டிசெ.24
சாவகச்சேரி நகரசபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. நகரசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஷ் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அமர்வில் 2026ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. வாக்கெடுப்பில் இலங்கை தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் 14 உறுப்பினர்கள் ஆதரவாகவும், தேசிய மக்கள் முன்னணியின் மூன்று உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். இதனையடுத்து பட்ஜெட் 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (க-9)

# வருமான இலக்கை எட்டிய இறைவரித் திணைக்களம்

கொழும்பு, டிசெ.24
2025ஆம் ஆண்டுக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 2 ஆயிரத்து 203 பில்லியன் ரூபா வருடாந்த வருமான இலக்கை அடைவதில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வெற்றியடைந்துள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்கள வரலாற்றில் பதிவான அதிகூடிய வரி வருமானம் இதுவாகும். எதிர்வரும் சில நாள்களில் இதை மேலும் அதிகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-இ)

# புராதன சின்னங்களுக்கு ஏற்பட்ட சேதத்தை மதிப்பிடும் யுனெஸ்கோ

கொழும்பு, டிசெ.24
டித்வா சூறாவளியால் இலங்கையின் புராதனச் சின்னங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பிடுவதற்கு யுனெஸ்கோ அமைப்பு தனது ஆதரவை வழங்க முன்வந்துள்ளது.
சிகிரியா, கண்டி மற்றும் அநுராதபுரம் ஆகிய முக்கியமான வரலாற்றுத் தலங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளைக் கண்டறிந்து, அவற்றை மீளச் சீரமைப்பதற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்வதே இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது. தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொரு தளத்துக்கும் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான இறுதி அறிக்கைகள் இன்னும் வெளியிடப்படவில்லை. இதுதொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கும் யுனெஸ்கோவுக்கும் இடையில் தொடர்ச்சியான தொடர்பாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)




# ஒழுங்காக் கதைச்சுப் பழகுங்கோ!

சாது மிரண்டால் காடு தாங்காது எண்டுவினம். நேற்றைக்கு சண்டிலிப்பாயில் அதுதான் நடந்திருக்குது. ஊசிக்கார டாக்குத்தர் எம்.பி.க்கு வாயில கண்டம் தானே. என்ன கதைக்கிறம், எங்க கதைக்கிறம் எண்டது அவருக்கே தெரியாது. வாயில அந்தந்த நேரத்துக்கு என்ன வருகுதோ அதை அடிச்சுவிடவேண்டியதுதான். பிறகு அதைவைச்சு அவர் தனக்குத்தானே நெகட்டிவ் விளம்பரம் தேடிக்கொள்ளுவார். அதுக்குப் பிறகு வழக்குச் செலவு, கார்வாங்கக் காசு எண்டு வெளிநாட்டு அன்ரிமாருக்கு அன்புக்கோரிக்கை வைப்பார். அவை தேவையான காசை அனுப்பினதும் 'வெளிநாட்டுக்கு கோப்பை கழுவத் தானே போனியள் செம்மறியள்' எண்டு அங்கை உள்ளவையைத் தாளிச்சு எடுப்பார். பிறகு பார்லிமெண்டுக்குப் போய் 'தேசியத்தலைவர்தான் என்ர தெய்வம்' எண்டு பிச்சு உறுமுறதைப் பார்த்திட்டு, எங்கட வெளிநாட்டுக் கண்மணியள் சில்லறையை டொலரிலும், யூரோவிலும் சிதறவிடுவினம். அதைப்பொறுக்கி எடுத்துக்கொண்டு ஏதும் பைவ் ஸ்ரார் ஹொட்டலில போய் வயித்தை நிரப்பிப் போட்டு, மக்களின்ர பிரச்சினையைக் கதைக்க வேண்டிய பார்லிமெண்டில மத்தியானம் குத்தரிசிச் சோறும் சொதியும் தான் கன்ரீனில கிடைக்குது. இந்த அநியாயத்துக்கு முடிவே இல்லையோ? எண்டு ஓலம் பாடுவார்.

இப்பிடி ஆள் செய்யிற குறளிவித்தையளைப் பார்த்து சனத்துக்கும் பொழுதுபோகும். இப்பிடிப்பட்ட அந்த ஊசிக்கார எம்.பி. எங்க வாய்வைக்கக்கூடாதோ அந்த விசயத்தில வாய்வைச்சிட்டார். நல்லூர் எண்டது எங்கட தமிழ்ச்சனத்துக்கு உயிர்மாதிரி. அப்பிடிப்பட்ட நல்லூர்க் கோயிலைக் கேவலப்படுத்தி பேட்டி ஒண்டு குடுத்திருக்கிறார். அந்தப் பேட்டி வெளியில வந்ததும் சனங்கள் எல்லாரும் கொதிச்சுப் போட்டினம். போனகிழமை மகாநாயக்கர் மாரிட்டப் போய் கையில பிரித் நூல் கட்டினதோட ஊசிக்கார எம்.பி.யின்ர கதைபேச்சுகளும் ஒருமார்க்கமாத்தான் இருந்தது. அதே பிளானிலதான் நல்லூர்க் கோயிலைப் பற்றியும் ஆள் கேவலமாக் கதைச்சிருக்குது. அப்பிடிக் கதைச்ச சூடு ஆறமுதலே சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்துக்கு நேற்றைக்கு ஆள் தன்ர தங்கத்தோட போயிருக்கு. ஏற்கனவே கொதிச்சுப் போயிருந்த சனங்கள், ஊசிக்காரரைக் கண்டதும் அப்பிடியே அப்பிப் பிடிச்சிட்டினம். 'என்னத்துக்கு நல்லூர்க் கோயிலை இடிக்கோணும் எண்டனியள்? தையிட்டிப் போராட்டத்துக்குப் போனவையெல்லாம் அசலம் அடிக்கத் தான் போனவையோ?' எண்டு அவையள் கேக்க, ஊசிக்காரருக்கு வேர்த்து விறுவிறுத்துப் போட்டுது.

உடனேயே ஆள் தன்ர தங்கத்தையும் இழுத்துக் கொண்டு வெளியில வந்திட்டார். வெளியாலையும் சனம் விடேலை. ஆளைப் பிடிச்சு கேள்விகேட்டு சிப்பிலியாட்ட, ஆளும் தன்ர பழைய கோலங்கொண்டு, கொந்தளிச்சு 'நீ ஓ.எல். படிச்சனியோ?' எண்டு படிப்புக்கதையில இறங்கிட்டார். ஆனால் சனமும் விடேலை. 'நாங்கள் ஓ.எல். மட்டுமில்லை ஏ.எல்லும் படிச்சுட்டுத்தான் வந்திருக்கிறம். மற்றவை மாதிரி எங்களைப் பேய்க்காட்டா ஏலாது எண்டு சொல்ல 'நான் நல்லூரை இடிக்கோணும் எண்டு சொல்லேலை. நீ ஒருக்காப் போய் வடிவாக் கேட்டுப்பார். நீயெல்லாம் கட்சியளுக்கு கொடி பிடிக்கிற ஆள் தானே' எண்டு சனத்தைப் பார்த்து காவாலி விடுகாலி மாதிரி கத்தத் தொடங்கிட்டார். ஒரு எம்.பி. சனத்தோட எப்பிடிக் கதைக்கோணும், எப்பிடி நடக்கோணும் எண்டு முதலில ஊசிக்காரருக்கு ஆரும் சொல்லிக்குடுங்கோ. கேள்வி கேட்ட சனத்தோட கதைக்கத் தெரியாதவருக்கெல்லாம் முதலமைச்சர் கனவுதான் ஒரு கேடு கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்

(ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். அருகில் இருக்கும் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** தந்தைவழியில் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். கணவன்– மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். இளைய சகோதரவகையில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர்செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சிதரும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச்செல்லவும். கணவன்– மனைவிக்கிடையே சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். வாழ்க்கைத் துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.


**தனுசு:** சகோதரர்கள்வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்குத் திடீர்ப்பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்பட வேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**கும்பம்:** அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவுசெய்யவேண்டி இருக்கும் கணவன் – மனைவிக்கிடையே வீண்விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்குப் பக்கபலமாக இருப்பார்.





# தேசிய லொத்தர் சபையால் மானிப்பாயில் மனிதாபிமான உதவி

**யாழ்ப்பாணம்.டிசெ.24**

**தேசிய லொத்தர் சபையின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தின் மானிப்பாய் பிரதேச மருத்துவமனையை அண்டிவாழும் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 213 பேருக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.**

இந்த நிகழ்வு மானிப்பாய் பிரதேச மருத்துவமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கடந்த காலங்களில் இந்தப் பிரதேசத்தில் சிக்கன்குனியா, டெங்கு போன்ற நோய்களால் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த மக்களைப் பாதுகாப்பதற்காக மானிப்பாய் பிரதேச மருத்துவமனையின் நலன்புரிச் சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் ரஞ்சித் நாணயக்கார, மானிப்பாய் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பதிகாரி எ. காந்தநேசன், மானிப்பாய் பொலிஸ் நிலைய உப பரிசோதகர் பி.ஆரியரட்ன, தேசிய லொத்தர் சபையின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பாரதன், ஊழியர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-26)

# கஜமுக சங்காரம்

யாழ்ப்பாணம், டிசெ.24

தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரதமும் இலட்சார்ச்சனைப் பெருவிழாவும் கடந்த 5ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

கஜமுகாசுர சங்கார உற்சவம் இன்று புதழமை மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ளது. (ச-41-66)

# மூதாட்டி சாவு

யாழ்ப்பாணம்,டிசெ.24

தேவாலயம் செல்வதற்காக ஆயத்தமான மூதாட்டி, திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் பளை கச்சார் வெளியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அதே பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (க-9)


# ஆன்மிகச் சுற்றுலா

யாழ்ப்பாணம்,டிசெ.24

பச்சிலைப்பள்ளிப் பிரதேச முதியோர் செயலக அலகின் ஏற்பாட்டில் முதியவர்கள் இன்று புதன்கிழமை ஆன்மிகச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கோவில்களில் இவர்கள் தரிசனங்களை மேற்கொள்வர்.

இதற்கென பிரதேசத்தில் இயங்கும் முதியோர் சங்கங்களிலிருந்து தலா பத்து முதியவர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (க-9)



# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், டிசெ.24

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி மஹோற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் பத்துத் தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக மஹோற்சவம் நடைபெறும். எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.25 மணியளவில் தேர்த்திருவிழாவும், 31ஆம் திகதி புதன்கிழமை காலை பொன்னாலை திருவடிநிலைக் கடற்கரையில் தீர்த்தத் திருவிழாவும், அன்றைய தினம் இரவு 8 மணியளவில் கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும். தேர்த்திருவிழா நாளன்று அதிகாலை 5 மணியளவில் சுவர்க்கவாயில் தரிசனமும் இடம்பெறும். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

மிக அதிக உயரத்தை அடைய விரும்பினால் கீழ்மட்டத்திலிருந்து தொடங்கு.

—சைரஸ்—

# தீர்வுக்கான திறவுகோல் இதுவல்ல!

தமிழ்த் தேசியப்பேரவையின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான குழுவினர், அண்மையில் தமிழகம் சென்று முதல்வர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, சீமான், கி.வீரமணி உள்ளிட்ட முக்கியமான தமிழக அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசியுள்ளனர். குறிப்பாக, இலங்கையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு துரிதப்படுத்திவரும் புதிய அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாடுகள் மற்றும் தமிழக மீனவர்களின் எல்லைதாண்டிய அத்துமீறல்கள் போன்ற எரியும் பிரச்சினைகள் குறித்து அவர்கள் தமிழகத் தலைவர்களிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். தமிழகத்திற்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தும் நோக்கில் இந்தச் சந்திப்புகள் அமைந்திருந்தாலும், இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நடைமுறைத் தீர்வுகள் குறித்த கேள்விகளும் எழாமலில்லை.

இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் 'ஏக்கிய இராச்சிய' ஒற்றையாட்சி அரசியலமைப்பைத் தடுத்து நிறுத்தவும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தவும் இந்திய மத்திய அரசுக்கு தமிழக அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதே இவர்களின் பிரதான கோரிக்கையாக இருந்தது. பொருளாதார ரீதியாக இலங்கைக்கு இந்தியாவின் தேவை இருப்பதால், இந்த அழுத்தத்தைப் பிரயோகிக்கமுடியும் என்ற வாதத்தை அவர்கள் முன்வைக்கின்றனர். இந்தக் கோரிக்கைகள் ஈழத்தமிழர்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கின்றன என்றாலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போதைய புவிசார் அரசியல் சூழலில் மிகக்குறைவு என்பதே நிதர்சனமான உண்மை. இலங்கை சார்ந்த வெளியுறவுக்கொள்கை முடிவுகளை எடுப்பது இந்திய மத்திய அரசே தவிர, தமிழக மாநில அரசு அல்ல என்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த உண்மை.

தற்போதைய சூழலில், தமிழகத்தில் ஆளும் தி.மு.க. அரசுக்கும் இந்திய மத்திய பா.ஜ.க. அரசுக்கும் இடையிலான உறவு பல்வேறு விவகாரங்களில் சுமுகமாக இல்லை. இத்தகையதொரு பின்னணியில், மத்திய அரசுடன் முரண்பட்டு நிற்கும் தமிழக அரசால், இலங்கையின் அரசியலமைப்பு மாற்றம் போன்ற அதிமுக்கியமான விவகாரத்தில் டெல்லிக்கு எந்தளவுக்கு அழுத்தம் கொடுக்கமுடியும் என்பது மிகப்பெரிய கேள்விக்குறி. தமிழகத் தலைவர்கள் ஈழத்தமிழர் விவகாரத்தில் ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினாலும், இறுதியில் அவர்கள் இந்திய மத்திய அரசின் வெளியுறவுக்கொள்கைக் கட்டமைப்புக்குள்ளேயே இயங்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதே இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடாக இருக்கும்போது, அதற்கு முரணான ஒரு நிலைப்பாட்டை எடுக்க தமிழக அரசால் மத்திய அரசை நிர்ப்பந்திக்கமுடியாது. தமிழக மீனவர் விவகாரத்திலும்கூட, மத்திய அரசின் உறுதியான தலையீடின்றி தமிழக அரசால் தனித்து ஒரு தீர்க்கமான முடிவை எட்டமுடியாது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு இந்த அரசியல் யதார்த்தம் தெரியாததல்ல. 13ஆவது திருத்தத்தைக் கடுமையாக எதிர்க்கும் அதேவேளை, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அவர் முழுமையாக நிராகரிக்காததன் பின்னணியில் சர்வதேச மற்றும் பிராந்திய வல்லரசுகளின் நலன்கள் சார்ந்த கணக்குகள் உள்ளன. தூய தமிழ்த் தேசியம் பேசும் அதேநேரம், தேர்தல் அரசியலையும் கருத்திற்கொண்டே இந்த நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, தமிழ்த்தேசியப் பேரவையின் இந்தத் தமிழக விஜயமானது, ஈழத்தமிழ் மக்களிடையே அவர்களது கட்சிக்குரிய அரசியல் செல்வாக்கை அதிகரிக்கவும், தங்களை முதன்மையான தமிழ்த்தேசிய சக்தியாகக் காட்டிக்கொள்ளவும் உதவக்கூடுமே தவிர, அவர்கள் கோருவது போல இலங்கையின் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை உடனேயே தடுத்து நிறுத்தவோ அல்லது தமிழக மீனவர்களின் அத்துமீறல்களுக்கு உடனடித் தீர்வு காணவோ வழிவகுக்காது. இது எல்லைதாண்டிய ஒரு அரசியல் இராஜதந்திர நகர்வே தவிர, உடனடித் தீர்வுகளுக்கான திறவுகோல் அல்ல.




## வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ள இலங்கையின் ஏற்றுமதித்துறை

கொழும்பு, டிசெ.24

2025 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதித்துறை 5.8 வீத வருடாந்த வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மங்கள விஜேசிங்க, கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தரவுகள் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் மதிப்பிடப்பட்ட மாணிக்க மற்றும் ஆபரணங்கள் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளுக்கான ஏற்றுமதி வருமானத்துடன் இணைந்து மொத்த ஏற்றுமதி வருமானம் 15 776.36 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

2025 நவம்பர் மாதத்தில் பொருள்கள் மற்றும் சேவைகள் துறைகளின் மொத்த ஏற்றுமதி வருமானம் 1,3 64.52 மில்லியன் அமெரிக்க டொலராகும். இது 2024 நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 5.56 வீத வருடாந்த வளர்ச்சியாகும். (எ-இ)



## துப்பாக்கிச்சூடு ஒருவர் காயம்


கொழும்பு, டிசெ.24

நுகேகொட சந்தியில் இருந்து கொஹுவல நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி ஒன்றில் பயணித்தவர்களை இலக்கு வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஒருவர் காயமடைந்து களுபோவில மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த இனந்தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

## கொழும்பு மாநகரசபை பாதீடு தோற்கடிப்பு

கொழும்பு, டிசெ.24

தேசிய மக்கள் சக்தியின் அதிகாரத்துக்குட்பட்ட கொழும்பு மாநகரசபையின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்றுமுன்தினம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக 60 வாக்குகளும், ஆதரவாக 57 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. (எ-இ)



## தங்கம் விலை அதிகரிப்பு

கொழும்பு,டிசெ.24

உலகச் சந்தையில் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, இலங்கையிலும் தங்கத்தின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

நேற்று நாட்டில் தங்கத்தின் விலை சுமார் 7,000 ரூபாவால் அதிகரித்துள்ளது.

அதன்படி, 22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை 325,600 ரூபாவாக பதிவாகியுள்ளது. அதே நேரம் நேற்றுமுன்தினம் 344,000 ரூபாவாகக் காணப்பட்ட 24 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை நேற்று 352, 000 ரூபா வரை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## பணவீக்கம் நவம்பரில் சரிவு

கொழம்பு,டிசெ.24

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்படி, 2025ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பணவீக்கம் குறைவடைந்துள்ளது. இதற்கமைய ஒக்ரோபர் மாதத்தில் 2.7 வீதமாக பதிவாகியிருந்த நாட்டின் முதன்மை பணவீக்கம், நவம்பர் மாதத்தில் 2.4 வீதமாக குறைவடைந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் 4.1 வீதமாக பதிவாகியிருந்த உணவுப் பணவீக்கம், நவம்பர் மாதத்தில் 3.6% ஆக குறைவடைந் துள்ளது.

அத்துடன், ஒக்ரோபர் மாதத்தில் 1.5 வீதமாக காணப்பட்ட உணவு அல்லா பணவீக்கம், நவம்பர் மாதத்தில் மாற்றமின்றி 1.5% ஆகவே காணப்படுவதாகத் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
வியாழக்கிழமை - மார்கழி 10
25.12.2025
சுபநேரம் : 03.24 - 04.51
ராகுகாலம் : 09.24 - 10.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்டத்தில்

# பண்டிகைக்காலச் சுற்றிவளைப்பு; 48 வியாபார நிலையங்கள் சிக்கின

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகாரசபையினரால், பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது, 48 வியாபார நிலையங்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார்.

டிசெம்பர் மாதத்தில் நேற்றுமுன் தினம் வரையான காலப்பகுதியில் விசேட சுற்றிவளைப்புகள் மேற் கொள்ளப்பட்டன.

இதன்போது காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமல் பொருள் களை விற்பனை செய்தமை, பொதிகளில் உள்ள சுட்டுத்துண்டுகளில் திரிவுகளையும் மாற்றங்களையும் செய்தமை, போலித் தயாரிப்புகள் மற்றும் எஸ். எல். எஸ் (SLS) குறியீடற்ற தரமற்ற பொருள்களை விற்பனை செய்தமை, மின்சார மற்றும் இலத்திரனியல் சாதனங்களுக்கு உத்தரவாதச்சீட்டு (Warranty card) வழங்கப்படாமல் விற்பனை செய்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தக் காலப்பகுதியில் எரிவாயுவுக்குப் போலியான தட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், பதுக்குதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறும். எனவே பொதுமக்கள் ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்படின் 0212219001 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு முறைப்பாட்டை வழங்கமுடியும். தவறிழைக்கும் வியாபாரிகளுக்கு எதிராக தொடர்ந்தும் சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அதேவேளை பொதுமக்களும் பாவனைக்காக பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது மிகவும் அவதானமாகச் செயற்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-27,26,66)





## கற்றல் உபகரணங்கள் இராணுவத்தால் வழங்கல்

மன்னார், டிசெ.24

இராணுவத்தின் 54ஆவது காலாட்படைப்பிரிவினரால் வசதி குறைந்த பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு பாடசாலைக் கற்றல் உபகரணங்களை மன்னார் நகர சபை மண்டபத்தில் வைத்து நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை வழங்கினர்.

நிகழ்வில் சாந்திபுரம் ஆரம்ப பாடசாலை, மன்னார் அலாவுதீன் பாடசாலை மற்றும் மன்னார் நகரசபை சுத்திகரிப்புப் பணியாளர்களின் பிள்ளைகள் உள்ளடங்கலாக 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து பாடசாலைகளுக்கான அன்பளிப்புகள் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன. (ச-41-56)

## பருத்தித்துறையில் டெங்கு ஒழிப்பு

# 24 குடியிருப்புகளுக்கு சிவப்பு எச்சரிக்கை!

யாழ்ப்பாணம்,டிசெ.24

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது 124 இடங்களில் டெங்கு நுளம்பு பரவும் ஏதுநிலை காணப்பட்டது. 24 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், 10 குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நகரசபையினர், சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர், பிரதேச செயலகத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து வீடுகள் தோறும் களத்தரிசிப்புகளை மேற்கொண்டு சோதனையிட்டனர். (க-100)





## முல்லை விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கிவைப்பு!

முல்லைத்தீவு, டிசெ.24

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் அழிவைச் சந்தித்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டுவருகின்றது. முதற்கட்ட இழப்பீட்டுத்தொகை வழங்கும் நிகழ்வு பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் பங்கேற்புடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

மாவட்டத்திலுள்ள கமநலசேவை நிலையங்கள் ஊடாக நெற்பயிர்ச்செய்கை அழிவுமதிப்பீடுசெய்யப்பட்டுவிவசாயிகளுக்கான இழப்பீடுகள் பதிவுசெய்யப்பட்டநிலையில் முதற்கட்டமாக 296 விவசாயிகளின் 218.8 ஹெக்டெயர் நெற்செய்கை அழிவுக்காக 32 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. (ச-41-19)

## ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வு

மட்டக்களப்பு, டிசெ.24

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், மனித உரிமைச்செயற்பாட்டாளருமான மாமனிதர். ஜோசப் பரராஜசிங்கத்தின் 20ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை வியாழக்கிழமை மட்டக்களப்பு மாநகரசபையின் நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மட்டக்களப்பு காந்திப்பூங்காவிலிருந்து நினைவுப் பேரணி ஆரம்பமாகி மட்டக்களப்பு மாநகரசபை நகர மண்டபத்தைச் சென்றடையும். அதனைத் தொடர்ந்து மலர்மாலை அணிவித்தல், நினைவுச்சுடர் ஏற்றுதல், மலரஞ்சலி ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து கொழும்புப் பல்கலைக்கழகச் சட்டப்பீடப் பேராசிரியர். அ.சர்வேஸ்வரன் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (ச-66)

## உணவகங்களில் விசேட சோதனை

மன்னார்,டிசெ.24

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனைக்கு உட்பட்ட உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள்,வீதி உணவகங்கள் ஆகியன திடீர்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது மன்னார் நகர்ப் பகுதியில் சுகாதாரமற்ற முறையில் உணவுகளைத் தயாரித்து அசுத்தமாக, உணவு தயாரிக்கும் பகுதியை வைத்திருந்ததோடு, சூடான உணவுகளை சுகாதார விதிமுறைகளை மீறி பிளாஸ்ரிக் வாளியில் களஞ்சியப்படுத்தி இருந்த உணவகம் மீது சுகாதாரத் துறையினர் சட்டநடவடிக்கை எடுத்தனர். அங்கிருந்த உணவுகளும் பயன்படுத்தமுடியாதவகையில் அழிக்கப்பட்டன. அதேவேளை வீதியோர உணவகங்கள் மற்றும் சிற்றுண்டி விற்பனை நிலையங்களில் உணவுகளைப் பெற்று உட்கொள்வோர் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-56)



தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில், கொடிகாமம் சமுர்த்தி வங்கியின் போதைப்பொருள் எதிர்ப்புக் கொடிதின சேமிப்பு நிதியிலிருந்து, உசன் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இரண்டு மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் மீண்டும் மழை ஜனவரி 7வரை தொடரும்

**யாழ்ப்பாணம்,டிசெ.24**

**வங்காள விரிகுடாவில் இலங்கைக்குத் தென்கிழக்கே புதிய காற்றுச் சுழற்சி உருவாகும் வாய்ப்புள்ளது. இதன் காரணமாக எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மழை பெய்யக்கூடும்.**

இந்த மழை எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது. எனினும், இடையில் ஒரு சில நாள்கள் மழையற்ற காலநிலை நிலவும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் புவியியல் துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வங்காள விரிகுடாவில் இலங்கைக் குத் தென்கிழக்குத் திசையில் உருவாகிய காற்றுச்சுழற்சி தற்போது மாலைதீவுகளுக்கு அருகாக நிலைகொண்டுள்ளது. இதனால் கிழக்கு, ஊவா, சப்ரகமுவ, மத்திய, மற்றும் தென் மாகாணங்களுக்கு கிடைத்துவரும் மழை படிப்படியாகக் குறைவடையும் வாய்ப்புள்ளது.

அதேவேளை எதிர்வரும் 31ஆம் திகதி முதல் மத்திய, ஊவா, வடமத்திய, தெற்கு, சப்ரகமுவ மாகாணங்களுக்கு மழை கிடைக்கத் தொடங்கும். இந்தப் பிரதேசங்களில் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை மழை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மீண்டும் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவலாக மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. எதிர்வரும் 2026 ஜனவரி மாதத்தின் பெரும்பாலான நாள்கள் மழைநாள்களாகவே அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் குளிரான வானிலை எதிர்வரும் 26ஆம் திகதி முதல் குறைவடையும் சாத்தியமுள்ளது-என்றுள்ளது.

(க-66)


## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 03 . 1960



மறைவு 22 . 12 . 2025

### திருமதி.பத்மநாதன் தனபாக்கியலட்சுமி

நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வதி விடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் தனபாக்கியலட்சுமி அவர்கள் நேற்று 22.12.2025 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து அன்னலட்சுமி தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற வைத்தியாம்பிள்ளை இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், பத்மநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும், ஜக்ஷனா(லண்டன்), கபிலன், கவிலக்ஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும். றஜிந்தன் (கண்ணா-லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும் கதிரமலைப்பிள்ளை(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்-வலயக்கல்வி அலுவலகம்,. வலிகாமம்), அமரர் கௌரியம்மா, கெங்கேஸ்வரி(ஓய்வு நிலை ஆசிரியர்-யா/பெரியபுலம் மாக வித்தியாலயம்), புவனேஸ்வரி (லண்டன்), மங்கையற்கரசி (சுவிஸ்) மீனாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 25.12.2025 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்.
0773069568
0775688842

1010/18 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 30958) GD



## மரண அறிவித்தல்



தோற்றம் 02.11.1946
மறைவு 23.12.2025

### சோமசுந்தரம் ஐயா தெட்சணாமூர்த்தி குருக்கள்

உரும்பிராய் தெற்கினைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஐயா தெட்சணா மூர்த்தி குருக்கள் அவர்கள் நேற்று (23.12. 2025) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் ஐயா - தையலம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ் சென்றவர்களான தம்பையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், சத்தியமூர்த்தி ஐயா, கனகாம்பிகை, கருணாமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அபிராமியின் அன்புத் தந்தையும், துவாரகனின் அன்பு மாமனாரும், ஆருகி, அதீரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் சமாதிக்கிரியைகள் அவரது மல்லாகம் இல்லத்தில் இன்று (24.12.2025) புதன்கிழமை நடைபெற்று. முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் அடக்கம் செய்வதற்காக மல்லாகம் கும்பளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
துவாரகன் (மருமகன்) 076 481 8271
குகதாசன் (மருமகன்) 077 9687 760

CS 30960) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள, சமூக ஆற்றுப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு

சாவகச்சேரி, டிசெ.24

தென்மராட்சிப் பிரதேசத்தில் மாற்றுவலுவுள்ளோரைப் பராமரிப்பவர்களுக்கான உள, சமூக ஆற்றுப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பெயார்மெட் நிறுவனத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலர் எவ்.சீ.சத்தியசோதி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் மாற்றுவலுவுள்ளவர்களைப் பராமரிப்பவர்கள் 25 பேரும், வளவாளராக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் உளநல மருத்துவ அதிகாரி மருத்துவர் திருமதி விநோதா அச்சுதனும் கலந்துகொண்டனர்.

(எ-41-9)

# திடீர் சுகவீனமுற்று குடும்பத்தலைவர் பலி

யாழ்ப்பாணம், டிசெ. 24

உடுவில் ஆலடி பகுதியைச் சேர்ந்த குடும்பத்தலைவர் ஒருவர், திடீர் சுகவீன முற்று உயிரிழந்துள்ளார். தேவதாஸ் விமலதாஸ் (வயது-49) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு அவர் திடீர் சுகவீனமுற்று மயங்கிச் சரிந்துள்ளார். இதையடுத்து, அவர் குடும்பத்தினரால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று கூறியுள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)




**யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்**
**நூற்றாண்டு விழா தொடர்பான**
**விசேட பொதுக்கூட்டம்**

எமது பாடசாலையின் நூற்றாண்டு விழாவினை அடுத்த ஆண்டு சிறப்பாக கொண்டாடுவதற்காக செயற்பாட்டுக்குழுக்களை அமைத்தலுக்கான விசேட பொதுக்கூட்டம் எமது பாடசாலையில் இடம்பெற உள்ளது.

நேரம் : பிற்பகல் 04.00 மணி
காலம் : 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை
இடம் : பாடசாலை பிரதான மண்டபம்.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் தவறாது சமூகமளித்து எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு தங்களால் ஆன ஆலோசனைகளை நல்கி அதன் வளர்ச்சிக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
பழையமாணவர் சங்கம்

(CS/30950) J-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமங்கலாய் சிவன் ஆலயம்

## தமிழர் தொன்மையின் நூற்றாண்டுச் சாட்சியம்

**விளக்குகின்றார் வரலாற்று ஆய்வாளர் பேராசிரியர் பரமு.புஸ்பரட்ணம்**

**நேர்கண்டவர் - நாகராசா தனுஸ்காந்**



திருமூலரால் சிவபூமி என அழைக்கப்படும் கிழக்கிலங்கையின், திருகோணமலை மாவட்டத்தில் பண்டைய காலம் தொட்டு பல புகழ் பெற்ற சிவாலயங்கள் மிகவும் சிறப்பு நிலையில் இருந்திருப்பதை வரலாற்று ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. அவ்வாறான வரலாற்றுத் தடயங்கள் பல இயற்கை மற்றும் செயற்கைக் காரணிகளால் அழிவுக்கு உள்ளாகியமை மறுக்கமுடியாத உண்மையாகும். இருப்பினும் அவற்றின் சிதிலங்கள் பல இடங்களில் வெளிப்பட்டு தமிழரின் தொன்மை தொடர்பில் மீண்டும் வலுவான சாட்சியங்களாக இன்றுவரை பேரினவாதக் கொள்கைகளுக்கு மத்தியில் போராடிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு அழிவுற்று, எஞ்சிய சுவடுகளில் ஒலிக்கும் பூர்வீகத்தின் சாட்சியங்களில் ஒன்றுதான் திருகோணமலை மூதூர் கொட்டியாபுரப்பற்று பிரதேசத்தில் காணப்படுகின்ற திருமங்கலாய் சிவன் கோவில். திருக்கரசை புராணத்தின்படி அப்போது கலைகள் பலவற்றை வளர்த்த தமிழ் சைவப் பண்பாட்டின் தலைசிறந்த இருப்பிடமாக தமிழர் நாகரிகத்தில் சிறந்த மக்கள் கூட்டம் வாழ்ந்த இடமுமாக திருமங்கலாய் அறியப்படுகின்றது. அந்த ஆலயம் தொடர்பில், வரலாற்று ஆய்வாளர் பேராசிரியர் பரமு.புஸ்பரட்ணம் வழங்கிய நேர்காணல் இது.

**கே: திருமங்கலாய் சிவன் கோவில் சோழர் காலத்துக்குரியதாகக் கூறப்படுகின்றது. இதற்கான சான்றுகள் எவை?**

ப: இந்த ஆலயம் சோழர் காலத்துக்கு உரியது என்பதை நிரூபிப்பதற்காக அங்கு கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ள சொற்கள், பெயர்கள், அதனுடைய எழுத்துரு என்பன சோழர் காலத்திற்குரியதாகும். குறிப்பாக இந்த ஆலயத்தில் காணப்படும் தூண்கள், தாமரைப் புடைப்புச் சிற்பங்கள், தெய்வச் சிலைகளுக்கான பீடங்கள் என்பன பொலநறுவைக்கால இரண்டாம் இலக்க சிவன் ஆலய கட்ட அமைப்பை ஒத்ததாகக் காணப்படுகின்றது. இதனுடைய கற்பக்கிரகம் 5 அடி நீள அகலத்துடன் காணப்படுகின்றது. அதன் சுவர்கள் மிகப்பெரியதாக தடித்துக் காணப்படுவதன் ஊடாக இதனை கி.பி 10, 11ஆம் நூற்றாண்டு காலச் சோழர் கோவில் என்பதனை உறுதிசெய்ய முடிகின்றது.

கல்வெட்டைப் பார்த்தோமானால் கி.பி. 10ஆம், கி.பி. 11ஆம் நூற்றாண்டுக்குரிய மூன்று கல்வெட்டுகள் ஆலய நிர்வாக ஒழுங்குகள் பற்றியும், ஆலயத்துக்கு சிற்றம்பலம் உடையார், திருவெண்ணைக்கூற்றன், திருவரங்கம் முதலான அதிகாரிகள் சமூகப் பெரியவர்கள் வழங்கிய தானங்கள் (காசு) பற்றியும் கூறுகின்றன. கி.பி. 15ஆம், கி.பி. 16ஆம் நூற்றாண்டுக்குரிய ஏனைய இரு கல்வெட்டுகளும் ஆலயத்துக்கு பசுக்கள் தானமாக வழங்கப்பட்ட செய்திகளைக் கூறுகின்றன. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கங்குவேலி என்ற இடத்தில் திருமங்கலாய் ஆலயத்திற்குரிய மணி ஒன்று காணப்படுகின்றது.

இது திருமங்கலாய் ஆலயத்தில் இருந்து பிற்காலத்தில் கங்குவேலிக்கு எடுத்துச் செல்லப்பட்ட மணியாகும். மணியில் திருமங்கலாய் கோவிலுக்கு அவ்வூரில் வசித்த (திருமங்கலாயில் வசித்த) 'பத்திபெட்டி மகன் பத்தன் உடைய உபயம்' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தச் சாசனத்தின் எழுத்தமைதி கொண்டு இதன் காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டிற்கு உரியதெனக் கூறலாம். ஆகவே மேற்கூறப்பட்ட கல்வெட்டுகள். ஆலய மணிச் சாசனம் என்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டு இந்த ஆலயம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஏறத்தாழ 17ஆம் நூற்றாண்டு வரை அழிவடையாத நிலையில் பிரதேச மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளமை தெரியவருகின்றது.

**கே: திருமங்கலாய் பழம்பெரு தமிழ்க் கிராம் இருந்தமைக்கான சான்றாக அமைகின்றதா?**

ப: இந்த ஆலயம் இருந்த பிரதேசத்தில் சைவக் கோயில்கள் நிறைந்து காணப்பட்டன என்பதற்கான ஆதாரம் நாயன்மார்களின் பாடல்களில் இருந்து கிடைக்கப் பெறுகின்றது. 'குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்கோணமா மலையமர்ந் தாரே' என்ற திருஞானசம்பந்தர் தேவாரப்பாடல் மூலமாக, தமிழ் மக்கள் செறிந்து வாழும் திருகோணமலைத் தலம் என்பதனை சுட்டிக்காட்டுகின்றது. சோழர் காலத்தில் அரச நிர்வாக இடங்களாக அனுராதபுரம், பொலநறுவை காணப்பட்டாலும் திருகோணமலை சோழர்களின் முக்கிய கேந்திர நிலையமாகவும் நிர்வாகத் தலைநகரமாகவும் காணப்பட்டதற்கான கல்வெட்டுச் சான்றுகள் காணப்படுகின்றன. சோழர் காலத்தில் முக்கியமான இராணுவத் தளமாகவும் பொருளாதார கேந்திர மையமாகவும் திருகோணமலை அமைந்திருப்பதை உறுதி செய்கிறது. திருகோணமலை மாவட்டத்திலேயே அதிகளவான தமிழ்க் கல்வெட்டுகள் செறிவாகக் கண்டுபிடிக்கப்பட்டதோடு அதிகளவான இந்து சிவாலயங்களும் காணப்படுகின்றன. இவ்வாறான பின்னணியில் திருமங்கலாய் கிராமம் ஒரு தமிழ்க்கிராமம் என்பதும், இங்கு கோயில்கள் இருந்தமைக்கு முன்பே தமிழ் குடியிருப்புகள் செறிவாக காணப்பட்டன என்பதும் உறுதியாகின்றது.

இலங்கையில் சோழர், பல்லவர், நாயக்கர் காலங்களில் பல ஆலயங்கள் தோன்றிக் காணப்பட்டாலும் அந்த அரசுகளின் ஆதிக்கம் நிறைவடைந்த பின்பு ஆலயங்களும் மறைந்துவிடுகின்றன. ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயம் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் இருந்து 17ஆம் நூற்றாண்டு வரை வழிபடப்பட்டிருப்பதாக கல்வெட்டு ஆதாரங்கள் வெளிப்படுத்துகின்றன. திருமங்கலாய் என்பது சோழர் காலம், நாயக்கர் காலம், பல்லவர் காலம் போன்றவற்றில் இந்து ஆலயங்கள் இருந்த கிராமங்களுக்கு இட்ட பெயராக தமிழகத்தில் காணப்படுகின்றது. இந்தவகையில் தற்பொழுது லிங்கபுரம் என அழைக்கப்படுவது தற்போது வைக்கப்பட்டுள்ள பெயராக காணப்படுகின்றது.

பிற்பட்ட காலத்தில் இடம்பெற்ற அன்னியர்களின் கலைஅழிவுக் கொள்கையால் பல ஆலயங்கள் சிதைவுகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தாலும் இவ்வாலயம் தனியே ஒதுக்குப்புறமாக காட்டுப்பகுதியில் அமைந்திருப்பதால் ஆலயத்தில் இன்றளவும் அதன் கலையம்சங்கள் வெளிப்படுகின்றன. அத்தோடு மக்களின் இருப்பு 1964ஆம் மற்றும் 1980ஆம் ஆண்டு காலப்பகுதி வரை செறிவாகக் காணப்பட்டதோடு பின்பு ஏற்பட்ட இன முரண்பாடு காரணமாக மக்கள் அவ்விடத்தில் இருந்து படிப்படியாக வெளியேற்றப்பட்டனர்.

**கே: தமிழரின் பூர்வீக வரலாற்றுக்கு கிழக்கிலங்கை எந்த அளவிற்கு முக்கியமானது?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப: திருமங்கலாய் சிவன் கோவில் கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து திராவிடக் கட்டடக்கலை மரபில் தோன்றி வளர்ந்ததற்குப் பின்புலமாக திருமங்கலாய்ப் பிரதேசத்தின் தொன்மையான. செறிவான தமிழ்க் குடியிருப்புகள் இருந்துள்ளமை தெரிகின்றது. இந்த உண்மையை எமது ஆய்வின் போது அந்தப் பிரதேசத்தில் ஆங்காங்கே பிற தேவைகளுக்காக வெட்டப்பட்டிருந்த ஆழமான குழிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட 10ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட மட்பாண்ட ஓடுகள், கூரை ஓடுகள், சுடுமண் உருவங்கள் முதலான சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

தமிழகத்தில் பல்லவர் ஆட்சியில் தோன்றிய பக்தி இயக்கத்தின் செல்வாக்கால் சமகால இலங்கையிலும் கற்களைப் பயன்படுத்தி திராவிடக் கலைமரபில் ஆலயங்கள் அமைக்கும் மரபு தோன்றி வளர்ந்ததைக் காணமுடிகின்றது. அவற்றுள் சோழ ஆட்சியின் தலைநகராக இருந்த பொலநறுவையில் கட்டப்பட்ட இரண்டாம் சிவதேவாலயமே இலங்கையில் இதுவரை ஓரளவு முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முந்திய திராவிடக் கலைமரபில் கட்டப்பட்ட ஆலயம் எனக் கூறப்படுகின்றது. ஆனால் பொலநறுவை இராசதானி கால வரலாற்றில் எந்த இடத்திலும் சொல்லப்படாத திருமங்கலாய் சிவன் ஆலயம் அதன் கட்டட அமைப்பிலும். கலைமரபிலும் சற்று மேலோங்கிக் காணப்படுவதன் முக்கியத்துவம் எதிர்காலத்தில் விரிவாக ஆராயப்படவேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

சோழர் ஆட்சியிலும், சோழர் ஆட்சிக்குப் பின்னரும் பொலநறுவைக்கு அப்பால் வடக்கு - கிழக்கு இலங்கையிலேயே சோழ ஆட்சியாளர், தமிழ் அதிகாரிகள், தமிழ் வணிக கணங்கள் முதலியோரால் கட்டப்பட்ட ஆலயங்கள் பற்றிப் பல தமிழ்க்கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆயினும் அந்தக் கல்வெட்டுகள் கூறும் ஆலயங்கள் எந்த இடங்களில் இருந்துள்ளன என்பது பெரும்பாலும் இதுவரை அடையாளம் காணப்படாமலே உள்ளன. ஆனால் திருமங்கலாயில் ஆலயம் பற்றிய கல்வெட்டுகளுடன். ஆலய அமைப்பையும். அதன் கலை மரபையும் அறியக்கூடிய அரிய பல ஆதாரங்கள் முதன் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் கிழக்கிலங்கை இந்துக்களின் வரலாறு, பண்பாடு பற்றிய எதிர்கால ஆய்வுகளில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

இலங்கையில் அநுராதபுர இராசதானியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில பௌத்த ஆலயங்களே தற்காலத்திலும் வழிபாட்டிற்குரிய ஆலயங்களாகக் காணப்படுகின்றன. ஆனால் அநுராதபுரத்திலும். இலங்கையின் ஏனைய இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பெரும்பாலான ஆதிகால, இடைக்கால ஆலயங்கள் இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பிற்காலத்தில் அவை சுற்றுலாத் துறையின் முக்கியமான மரபுரிமை மையங்களாகவே செயல்பட்டு வருகின்றன. ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயம் கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து 1964ஆம் ஆண்டு வரை அங்கு வாழ்ந்த மக்களின் பிரதான வழிபாட்டு ஆலயமாகவே இருந்துள்ளது. இந்த உண்மையை அந்த ஆலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளும், ஆலய மணியில் பொறிக்கப்பட்டிருக்கும் சாசனமும், அங்கு பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களின் நில உரிமைப் பத்திரங்களும் உறுதிப்படுத்துகின்றன

.

### பாதுகாப்பும் தக்கவைப்பும்

விலைமதிக்க முடியாத எமது மரபுரிமைச் சின்னமொன்று எம் கண்முன்னே மண்ணுக்குள் மறைந்து போவதை வேடிக்கை பார்க்கும் நிலையில் நாம் இருக்கக்கூடாது. ஏனெனில் கடந்த முப்பது ஆண்டு கால அனர்த்தத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள், மீண்டும் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பியபோது தமது இருப்பிடங்களைக் காட்டிலும் தமது வழிபாட்டு ஆலயங்களை மீளுருவாக்கம் செய்வதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்த பெருமைக்குரியவர்கள். இது மதத்தின்மீது எமது மக்களுக்கு உள்ள அதித நம்பிக்கையைக் காட்டுகின்றது. ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயத்தினை ஒரு வழிபாட்டு ஆலயமாக மட்டும் பார்க்க முடியவில்லை. பலதரப்பட்ட மக்களின் பார்வையில் இவ்வாலயம் இலங்கையில் உள்ள தேசிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக நோக்கப்படலாம். எல்லாவற்றுக்கும் அப்பால் இலங்கையில் இந்து மதத்திற்கு நீண்ட வரலாறு உண்டு என்பதை அடையாளப்படுத்தும் விலைமதிக்க முடியாத மரபுரிமையின் அடையாளம். இம்மரபுரிமைச் சின்னங்களுக்குப் பின்னால் தமிழ் மக்களின் வரலாறும். பண்பாடும் பொதிந்து காணப்படுகின்றது. ஆகவே இவ்வாலயத்தை மீட்டெடுத்து, மீளுருவாக்கம் செய்து, பாதுகாக்க அனைத்து தமிழர்களும் ஒன்றிணைந்து உழைக்க முன்வரவேண்டும்.

# ஆண் குழந்தைகளுக்கு சிறுநீர்ப்பாதையில் ஏற்படும் சுருக்கங்கள்



மருத்துவர் பா.சயந்தன்
(குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ்.போதனா மருத்துவமனை)

**பைமோசிஸ் என்றால் என்ன?**

பைமோசிஸ் என்பது பிறந்த குழந்தைகளிலும், சிறுவர்களிலும் பொதுவான ஒன்றாகும். பிறக்கும்போது ஆணுறுப்பின் முன்தோல் இயற்கையாகவே தலைப்பகுதியுடன் ஒட்டியிருக்கும்.

பெரும்பாலான சிறுவர்களில் வளரும்போது அந்த முன்தோல் மெதுவாக பின்னுக்குச் செல்லக்கூடியதாக மாறும். சுமார் 3 வயதுக்குள், சிறுவர்களில் 90 வீதமானோருக்கு முன்தோலை ஒரு அளவுக்காவது பின்னுக்கு இழுக்கமுடியும். பால்யத்திற்குள் நுழையும் போது, பெரும்பாலும் எல்லாச் சிறுவர்களுக்கும் முன்தோல் முழுமையாகப் பின்னுக்குச் செல்லக்கூடியதாக இருக்கும்.

**இயல்பான பைமோஸிஸ்**
**சிக்கலான பைமோஸிஸ்**

இயல்பான பைமோஸிஸ் என்பது இயற்கையான வளர்ச்சிப்பகுதி. இது பாதிப்பற்றது, வலிதராதது, சிகிச்சை தேவையில்லாதது. கண்காணிப்பும் பெற்றோருக்கான நிம்மதிப்படுத்தலுமே போதுமானது.

சிக்கலான பைமோஸிஸ் என்பது புண், தொற்று அல்லது சுருக்குக் காரணமாக ஏற்படும் நிலை. இது சிறுநீர் கழிக்கும் போது முன்தோல் புடைத்துப் பெரிதாகக் காணப்படுவது, அடிக்கடி தொற்றுகள், வலி, சிறுநீர் கழிக்க சிரமம் போன்றவற்றால் வெளிப்படும். இதற்கு சிகிச்சை தேவைப்படும்.

**அறுவைச் சிகிச்சை**
**எப்போது தேவைப்படும்?**

சர்க்கம்சிசன் அல்லது ப்ரீபுடியோபிளாஸ்டி (முன்தோலை அகலமாக்கும் அறுவைச் சிகிச்சை) பின்வரும் சூழ்நிலைகளில் பரிந்துரைக்கப்படுகிறது:

அடிக்கடி ஏற்படும் சிறுநீரகத் தொற்றுகள்
மிகுந்த வலி அல்லது சிறுநீர் கழிக்க சிரமம்
அடிக்கடி ஏற்படும் பாலனைட்டிஸ் (முன்தோலும் கிளான்ஸும் வீக்கம் மற்றும் அழற்சி) அடிக்கடி வலுக்கட்டாயமாக முன்தோலை இழுப்பதால் ஏற்படும் காயம் அல்லது சுருக்கு ஸ்டீராய்டு கிரீம் தடவி, மெதுவான நீட்டிப்பு பயிற்சிகள் செய்வது, மற்றும் காலப்போக்கே பிரச்சினையை சரி செய்யக்கூடும்.

குழந்தைகளின் முன்தோலை வலுக்கட்டாயமாக பின்னுக்கு இழுக்கக்கூடாது. இது சிறிய காயங்கள், சுருக்கு, மேலும் பிரச்சினைகளை உருவாக்கும். .


சுத்தம் செய்யும்போது, முன்தோலைப் பின்னுக்கு இழுக்காமல் கழுவுவது போதுமானது.

எல்லா பைமோசிஸ் நிலைகளுக்கும் அறுவைச் சிகிச்சை தேவையில்லை. பல சிறுவர்களில் இது ஒரு இயற்கையான வளர்ச்சிப்பகுதி மட்டுமே; காலத்தோடு சரியாகிவிடும்.

சிகிச்சை தேவைப்படுவது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே, ஒவ்வொரு முன்தோல் இறுக்கத்திற்கும் அல்ல. பெற்றோருக்கு சந்தேகம் இருந்தால், குழந்தை மருத்துவர் அல்லது சிறுவர் அறுவைச் சிகிச்சை நிபுணரின் ஆலோசனையைப் பெறுவது நல்லது.

> பைமோசிஸ் ஆணுறுப்பின் முன்பகுதியை (கிளான்ஸ்) மூடியிருக்கும் முன்தோலை (கழ சநளமin) பின்னுக்கு இழுக்கமுடியாத நிலை ஆகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பங்களாதேஷில்

# நாடாளுமன்றம் முற்றுகை போராட்டங்களால் பதற்றம்

டாக்கா,டிசெ.24

**பங்களாதேஷில் கடந்த ஆண்டு பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ந்ததற்குக் காரணமாகவிருந்து மாணவர் போராட்டத்தை முன்னின்று நடத்திய ஷெரீப் உஸ்மான் ஹாடி என்ற நபரை துப்பாக்கிச்சூடு நடத்தி மர்மநபர்கள் கொலை செய்துள்ள நிலையில் தொடர் போராட்டங்களால் பங்களாதேஷத்தில் உச்சக் கட்டப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.**

கடந்த 12ஆம் திகதி மர்மநபர்களால் இந்த் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட நிலையில் அவரது தலையில் குண்டு பாய்ந்தது. அதனையடுத்து மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூருக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சிகிச்சையின் போது அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். இதனால் பங்களாதேஷில் மாணவர்கள் போராட்டங்களில் குதித்துள்ளனர்.

இதில் வன்முறை வெடித்தது. 2 பத்திரிகை அலுவலகங்கள் மற்றும் முன்னாள் பிரதமர் முஜிபுர் ரகுமான், ஷேக் ஹசீனா வீடுகள், அலுவலகங்களுக்கு தீ வைத்தனர்.

தேர்தலில் போட்டியிட முடிவு செய்திருந்த இங்குலாப் மாஞ்சா அமைப்பின் தலைவரான ஷெரீப் உஸ்மான், இந்தியாவுக்கு எதிராக பேசி வந்தார். இதனால் இந்தியத்தூதரகங்கள், இந்தியத்தூதர் வீடு ஆகியவை மீது கற்கள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் இந்து வாலிபர் ஒருவர் அடித்துகொல்லப்பட்டார்.

பங்காளதேஷில் நேற்று அதிகாலை வரை வன்முறை நடந்தது. பின்னர் இராணுவத்தினர் தீவிரகண்காணிப்பில் ஈடுபட்டு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்த நிலையில் சுட்டுக் கொல்லப்பட்ட ஷெரீப் உஸ்மான் ஹாடியின் உடல் சிங்கப்பூரிலிருந்து பங்களாதேஷுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஷெரீப் உஸ்மானின் இறுதி ஊர்வலத்தில் இலட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டனர். நாடாளுமன்றத்துக்குள்ளும் போராட்டக்காரர்கள் நுழைய முயன்றதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. தொடர் போராட்டங்களால் பங்களாதேஷில் உச்சக் கட்டப் பதற்றம் நிலவுகிறது. (ச-இ)

# இம்ரான் கான், மனைவிக்கு 17 ஆண்டுகள் சிறைத்தண்டனை

தெஹ்ரான், டிசெ.24

ஊழல் வழக்கில், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பிபிக் ஆகிய இருவருக்கும் 17 ஆண்டுகள் சிறைத் தண்டனையை பாகிஸ்தான் நீதிமன்றம் விதித்துள்ளது.

முன்னாள் பிரதமர் இம்ரான் பதவியில் இருந்த போது, தமக்கு கிடைத்த பரிசுப் பொருள்களை அரசு நிதியில் சேர்க்காமல் மனைவியுடன் சேர்ந்து விற்பனை செய்து சொத்துகள் சேர்த்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுதவிர மேலும் பல வழக்குகள் அவர் மீது தொடுக்கப்பட்டன. அதில் பாகிஸ்தான் தூதரகம் அனுப்பிய இரகசியத் தகவல்களை கசியவிட்டதாக தொடரப்பட்ட வழக்கில் இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து, அவர் அடியாலா சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார். இந்த நிலையில், சவுதி மன்னரிடம் பரிசுப்பொருளாக நகை பெற்றது தொடர்பான 2ஆவது ஊழல் வழக்கில், இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபி ஆகியோருக்கு நம்பிக்கை மோசடி செய்ததற்காக 7 ஆண்டுகள், ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் 10 ஆண்டுகள் என மொத்தம் 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதோடு, தலா 1.64 கோடி ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 02 சபாபதி வீதி 96. 96/1 எனும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்களின் உரிமையாளர் வேலன் கதிரவேலர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு வீ.நவரத்தினராசா முகதாவில் 1956.01.16 ம் திகதி 4986 ம் இலக்கத்தில் நிறைவேறிய கடன் உறுதி மூலம் வண்ணார்பண்ணை கிழக்கைச் சேர்ந்த வேலன் கதிரவேலுவும் இராமு தம்புவும் பெண் சின்னப்பிள்ளையும் அவ்வூர் கனகசபை கைம்பெண் சோதிப்பிள்ளைக்கும் கனகசபை மகள் மகாறோசினிக்கும் கடன் உறுதி மூலம் வழங்கியுள்ளனர்.

தொடர்ந்து இராமு தம்பு மகள் நீலாம்பிகை பிரசித்த நொத்தாரிசு கதிரவேலு சிவசுப்பிரமணியம் முகதாவில் 24.11.2003 ம் திகதி 2710ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதிமூலம் குறித்த ஆதனத்தை தனக்குரியது என வெளிப்படுத்தியுள்ளார். அவ்வுறுதியின் ஆதன இடாப்பின் விபரிக்கப்படும் ஆதனத்திற்கு எனது காலஞ்சென்ற பிதா. மாதா ஆகிய இராமு தம்புவும் பெண் சின்னப்பிள்ளையும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் 9147ம் இலக்க பிரிவிடல் வழக்கின் இறுதித் தீர்வையின் பிரகாரம் சொந்தக்காரர்களாக இருந்தார்கள் என்றும் இவ்வாதனம் யாழ்ப்பாண மாவட்ட காணிப்பதிவகத்தில் டி 142/284 ல் பதியப்பட்டுள்ளது என்றும். எனது பெற்றோர்கள் குறித்த ஆதனத்தை 1956.01.16ம் திகதி பிரசித்த நொத்தாரிசு வீ.நவரத்தினராசா அத்தாட்சிப்படுத்திய 4986 ம் இலக்க உறுதியால் ரூபா மூவாயிரத்திற்கும் வட்டிக்கும் ஈடாக கைம்பெண் சோதிப்பிள்ளைக்கும் மகள் மகாறோசினிக்கும் கட்டுப்படுத்தி பின்னர் குறித்த ஈட்டு முறியின் பேரால் செலுத்த வேண்டிய முதல் வட்டியைச் செலுத்தி குறித்த ஈட்டு முறை 1969ம் ஆண்டு கார்த்திகை 244/200 மாதம் 27 ம் திகதி இரத்துச் செய்யப்பட்டு யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் டி இல் பதியப்பட்டுள்ளதென்றும் இப்புத்தகம் பதிவகத்தில் பழுதடைந்து விட்டதென்றும், எனது பெற்றோர்கள் குறித்த ஆதனத்தை எவருக்கும் மாறானதும் எவ்வித இடையூறுகளுமற்ற சுயாதீனமாக ஆண்டனுபவித்து எனது தாயார் இறக்க பிள்ளைகளான அப்புத்துரை பெண் நேசம்மா, பொன்னுத்துரை பெண் தங்கம்மா, சிங்கராசா பெண் கதிரமலர் ஆகியோரும் நானும் எங்கள் பிதாவாகிய இராமு தம்புவும் ஆண்டனுபவித்து வந்தோம் என்றும், எமது பிதா இராமு தம்பு எனது சகோதாரிகளாகிய மேற்படி அப்புத்துரை பெண் நேசம்மாவுக்கும் பொன்னுத்துரை பெண் தங்கம்மாவிற்கும் சிங்கராசா பெண் கதிரமலருக்கும் வேறு ஆதனங்களை சீதனமாக கையளிததுள்ளார் என்றும் குறித்த எனது பிதா மரணித்து விட்டமையால் இதன்பின் விபரிக்கப்படும் ஆதனம் எனக்கே முழுமையாக வந்நடைந்ததென்றும் வெளிப்படுத்தியுள்ளார். ஆதனமாக வண்ணார்பண்ணை கிழக்கிறை "செம்மண் கிடங்கடி நிலப்பரப்பு 3ம் குளி 1 38/50 வீடும் கிணறும் பயிர்வகைகளும் என வெளிப்படுத்தியுள்ளார்.

தம்பித்துரை பெண் நீலாம்பிகை தற்பொழுது (தம்பு மகள் நீலாம்பிகை) என்பவர் பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 09.02.2009 ம் திகதி 2467 ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் குகனேந்திரராசன் பெண் தர்மினிக்கு தனது சீவிய நலவுரித்துக்கு அமைவாக அதே அளவு கொண்ட ஆதனத்தை சீதனமாக வழங்கியுள்ளார்.

அதன் பின்னர் கொக்குவில் கிழக்கு அம்பகர் வீதியைச் சேர்ந்த கணபதி குகனேந்திரராசாவும் பெண் தர்மினியும் பிரசித்த நொத்தாரிசு த.விக்கினராசா முகதாவில் 2018.11.10 ம் திகதி 2225 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிமூலம் கொக்குவில் சபாபதி ஒழுங்கை இல 96. 96/1 ஐ சேர்ந்த வல்லி தியாகராசாவிற்கும் பெண் சறோசாவிற்கும் அதே ஆதனத்தை அறுதியாக நிறைவேற்றியுள்ளார்.

ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை யாழ்ப்பாணம் மாநகரசபை நாவாந்துறை கிழக்கு வட்டாரம் 23 (பழையது). நல்லூர்ர் பிரதேச செயலர் பகுதி, J/100 வண்ணார்பண்ணை வடகிழக்கு கிராமசேவகர் பகுதி, வரி மதிப்பீட்டு இலக்கங்கள் 96. 96/1 "செம்மண் கிடங்கடி" பரப்பு நிலம் இலாச்சம் 3ம் குளி 1 38/50வீடும் கிணறும் வான்பயிர், செய்பயிர்களும் இதற்கு எல்லைகள்

கிழக்கு - சின்னப்பொடியன் மாணிக்கத்துக்குரிய ஆதனம்.

வடக்கு - றோட்டு

மேற்கு - பொன்னன் தம்பையாவிற்கும் மனைவிக்கும் உரிய ஆதனம்

தெற்கு - கையொழுங்கை

இதனடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை வல்லி தியாகராசாவும் பெண் சரோசாவும் தமது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வல்லி தியாகராசாவும் பெண் சறோசாவும் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்

# மாதாந்த ஒன்றுகூடலும் போசாக்குணவு வழங்கலும்

பளை, டிசெ.24



பளை இந்திராபுரம் முதியோர் சங்க மாதாந்த ஒன்றுகூடலும் போசாக்கு உணவு வழங்கலும் இந்திராபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

சங்க அங்கத்தவர்களின் பங்களிப்புடன் மாதாந்தம் 10ஆம் திகதி ஒன்றுகூடல் நடத்தி முதியோர்களுக்கு போசாக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சங்கத் தலைவர் சி.சிவதாஸ் இதன்போது தெரிவித்தார். நிகழ்வில் கலந்துகொண்ட பிரதேச முதியோர் தேசிய செயலக அலுவலர்கள், பிரிவு கிராம அலுவலர்கள், கிராம அமைப்புகள் தாமும் இத்திட்டத்திற்கு பங்களிப்பு வழங்குவதாக தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYB

# 700 பில்லியன் டொலர் சொத்து; முதல் நிலை பணக்காரராக மஸ்க்!

வொஷிங்டன்,டிசெ.24
டெஸ்லா நிறுவுநர் எலான் மஸ்க்கின் நிகர சொத்துமதிப்பு 700 பில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது.
ஸ்பேஸ்எக்ஸ், ஸ்டார்லிங்க், டெஸ்லா ஆகிய நிறுவனங்க ளின் நிறுவுநரான எலான் மஸ்க்கின் நிகர சொத்துமதிப்பு 700 பில்லியன் டொலருக்கும் அதிக மாக உயர்ந்து, உலகின் முதல் பெரும் பணக்காரராக மேலும் உயர்ந்துள்ளார்.
டெஸ்லா நிறுவனத்தின் மீதான வழக்கில், எலான் மஸ்க்குக்குச் சாதகமாக தீர்ப்பு அமைந்ததால், எலானின் நிகர சொத்து மதிப்பு 749 பில்லியன் டொலராக உயர்ந்தது. கடந்த ஒக்ரோபர் மாதத்தில் எலான் மஸ்க்கின் சொத்து மதிப்பு 500 பில்லியன் டொலராக இருந்தது.
இந்த நிலையில், 800 பில்லியன் டொலர் மதிப்பீட்டுச் சந்தையில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் பட்டியலிடப்பட வாய்ப்பி ருப்பதாகத் தகவல் வெளியான நிலை யில், டிசெம்பர் 2ஆவது வாரத்தில் எலான் மஸ்க்கின் சொத்துமதிப்பு 600 பில்லியன் டொலரை எட்டியது. தற் போது, ஒரே வாரத்தில் 700 பில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது. (ச-இ)

# ஐரோப்பிய ஒன்றியத்தால் உக்ரைனுக்கு 90 பில். டொலர்



கியூ,டிசெ.24
ஐரோப்பிய ஒன்றியத் தலை வர்கள் உக்ரைனுக்கு 90 பில்லியன் டொலர் நிதி உத வியை வழங்க ஒப்புக்கொண் டுள்ளனர். உக்ரைனுக்கு நிதியுதவி அளிப்பது குறித்து விவாதிப்ப தற்காக ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் ஒன் றுகூடிய போதே மேற்படி தீர் மானம் எட்டப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுக ளில் உக்ரைனின் இராணுவ மற்றும் பொருளாதார தேவை களைப் பூர்த்தி செய்வதற்காக வட்டியில்லாத கடனாக இந்தத் தொகை வழங்கப்பட் டுள்ளது. உதவித் தொகை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து உக்ரேன் ஜனாதி பதி விளாடிமிர் ஷெலென்ஸ்கி ஐரோப்பிய ஒன்றியத் தலை வர்களுக்கு நன்றி தெரிவித் துள்ளார். (ச-இ)



# காஸாவில் ஒரு இலட்சம் பேருக்கு உணவுப் பற்றாக்குறை

## ஐ.நா. நிபுணர் குழு சுட்டிக்காட்டு

காஸா,டிசெ.24
காஸாவில் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பிறகு உணவு விநி யோகம் மற்றும் ஊட்டச்சத்து நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையிலும் இன்னும் ஒரு இலட்சம் பேர் 'பேரழிவு' உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளனர் என்று ஐ.நா. அங்கீகாரம் பெற்ற நிபுணர் குழு தெரிவித்துள்ளது. இது குறித்து ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்புக் கட்ட வகைப் பாடு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது-
காஸாவில் போர் நிறுத்தத்துக்குப் பிறகு உணவு விநியோகம் அதிகரித்துள்ளது. இருந்தாலும், அண்மைய மதிப்பீட்டில் 5 இலட்சம் பேர் 'அவசர நிலை' உணவுப் பற்றாக்குறையையும், ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் 'பேரழிவு நிலை' உணவுப் பற்றாக்குறையையும் எதிர்கொண்டுள்ளனர். இந்த முன்னேற் றம் மிகவும் மந்தமாக உள்ளது. மீண்டும் போர் ஏற்பட்டால் காஸா முழுவதும் மறுபடியும் பஞ்சம் ஏற்படும். காஸாவில் எந்தப் பகுதியும் இப்போது 'பஞ்சப் பகுதியாக' வகைப்படுத்தப் படவில்லை- என்றுள்ளது. (ச-இ)


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



### அமரர் வரப்பிரசிங்கம் செலல்லக்கிளி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (24.12.2025) புதன்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் (26.12.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விகிரிஜைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

கல்லுப்பிடுங்கி,
கொல்லங்கலட்டி.

குடும்பத்தினர்
077 6599 763



## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

1. The Chairman, Procurement Committee of University of Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the following works:

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA Grade | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE/C1/2025/37 | Renovation of Community Kitchen at University of Jaffna | 8.88 | 45 | C8 or above (Building) | Rs. 90,000.00 28.04.2026 | Rs. 2,500.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs.
Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna from 23rd December 2025 until 12th January 2026 from 9:00 hrs to 16:00 hrs and upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank with the Reference No "970000060000276" should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch, to reach on or before 10.00 hrs on the 13th January, 2026. Bids will be opened soon after closing, at 10.00 hrs on the 13th January, 2026 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. **Bids shall be valid at least for a period of 77 Days from the date fixed for receiving of Bids or any extended date.**
8. **All Bids shall be accompanied by a Bid Security which shall be;**
   - **In the form included in the Section 09 in the Bidding document.**
   - **In favour of "Vice Chancellor, University of Jaffna."**
   - **For the amount indicated in the above table against each work.**
   - **Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9**
9. **Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely at 10.00 hrs on the 7th January, 2026.**

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna.**

**22.12.2025**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவின் கடலுக்கடியில் தங்கப் படிமம்

கொழும்பு, டிசெ.24

கிழக்கு சீனக்கடல் பகுதியில், ஆசியாவின் மிகப்பெரிய கடலுக் கடியிலான தங்கப் படிமத்தை சீனா கண்டுபிடித்துள்ளது.

உலகிலேயே அதிகளவு தங் கத்தை உற்பத்தி செய்யும் நாடாக சீனா உள்ள போதிலும், தங்கக் கையிருப்பில், ஆபிரிக்கா மற் றும் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்த இடத்திலுள்ளது. இந்நி லையில், ஷான்டாங் மாகாணத் தின் யாண்டாய் நகரில் உள்ள லைஜோ கடற்கரைக்கு அப்பால், கடலுக்கு அடியில் ஒரு பிரமாண் டமான தங்கப் படிமத்தை சீனா கண்டுபிடித்துள்ளது.

(ச-இ)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பொதுச்சந்தை, இறைச்சிக்கடைகள்
## குத்தகைக்கு வழங்குவதற்கான 4ஆவது மீள்கேள்வி அறிவித்தல் - 2026

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பன 2026ஆம் ஆண்டிற்கு (01.01.2026 -31.12.2026) வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 24.12.2025 - 30.12.2025 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 30.12.2025 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 30.12.2025 செவ்வாய்க்கிழமை பி.ப 02.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

கேள்வி விண்ணப்பபடிவங்கள் மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, இரு கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையிலும் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் **"தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கு எதிர்வரும் 30.12.2025 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2026 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 1 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | 10,300.00 |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 2 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 3,250.00 | 1,000.00 | 100,000.00 | 3,392,120.00 |
| 3 | புத்தூர் பொதுச்சந்தை | - | 1,000.00 | 45,000.00 | 1,516,680.00 |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 4 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | 375,300.00 |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 5 | உரும்பிராய் கோழி இறைச்சிக்கடை | 4,500.00 | 1,000.00 | 20,000.00 | 794,700.00 |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2025.10.05 ஆம் திகதி இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும்.

தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.
2025.12.24

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 - 07 - 1941
மறைவு 22 - 12 - 2025

### மகேஸ்வரன் சிவகாமியம்மை

தொல்புரத்தை பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் சிவகாமியம்மை அவர்கள் கடந்த (22.12.2025) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - வள்ளிநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், அருணாசலம் மகேஸ்வரனின் மனைவியும், காலஞ்சென்ற மங்கையற்கரசி மற்றும் மகேந்திரன் (கனடா), அற்புதமலர் (ஆசிரியர் யா/பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம்) அவர்களின் தாயாரும், மதிவதனி, இரத்தினேஸ்வரன் அவர்களின் மாமியாரும், ராகுல், மதுசா, திவாகரன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செம்மனச்செல்வி, புஸ்பதேவி, தில்லைநமசிவாயம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (25-12-2025) வியாழக்கிழமை காலை 08.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மூளாய் பித்தளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

டச்சு வீதி,
மூளாய்.

தகவல்:
குடும்பத்தினர்
070 354 4478

(CS/60031) J-1

## ஆழ்ந்த அனுதாபங்கள்



தோற்றம் 08 . 05 . 1959
மறைவு 20 . 12 . 2025

உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் கொழும்பு-13ஐ வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

### திரு. வைத்திலிங்கம் ஜெயரஞ்சித்

[SVM (PVT) Ltd இல் முகாமையாளராக 30 வருடகாலமாக சேவைப்புரிந்து இளைப்பாறியவர்] இறைவனடி எய்தினார்.

எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் மரியாதைக்கும்
உழைப்பையும் நேர்மையையும் அர்ப்பணித்தவர்.

சக ஊழியர்களுடன் அன்பாக பழகி நட்பையும்
நம்பிக்கையையும் வாழ்வில் நடைமுறைப்படுத்தியவர்.

ஒரு பணியாளரை அல்ல ஒரு குடும்ப உறுப்பினரை
இன்று நாம் இழந்துள்ளோம்.

உங்கள் உழைப்பு எமது நினைவுகளில் - என்றும்
வாழும் உங்கள் ஆத்மா அமைதியில் இளைப்பாரட்டும்.

**எமது நிறுவனம் & சக ஊழியர்கள்**

அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்


**S.V.M. நிறுவனத்தினர் மற்றும் பணியாளர்கள்**

S.V.M.(PVT) Ltd.
இல.122, டாம் வீதி,
கொழும்பு-12.

S.V.முருகேசு,
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(4476C)

## மரண அறிவித்தல்



பிறப்பு 22 . 10 . 1944
இறப்பு 23 . 12 . 2025

### சண்முகம்பிள்ளை நல்லைநாதன்

நயினாதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிட மாகவும் கொண்ட சண்முகம்பிள்ளை நல்லைநாதன் அவர்கள் நேற்று (23.12.2025) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஐயாத்துறை - பவளம்மா தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகராசா மற்றும் சுரேந்திரநாதன், நிர்மலாதேவி மற்றும் யோகேஸ்வரி, விமலாதேவி, பரமேஸ்வரி, சோமாதேவி, கோபிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகநாயகி, கலாவதி, ரூபவதி, ரேவதி, நீலாவதி, கமலநாதன் ஆகியோரின் மைத்துனரும், கவிதா, சுசிதா, ராஜிதா, சுவேதினி, சண்முகபிரியன், கங்காஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காந்தரூபன், வசீகரன், புலேந்திரன், சத்தியன், பகீரதன், துசானி ஆகியோரின் மாமனாரும், டக்சனா, அபிசாந், கனிவிழி, டிதுர்சிகா, சப்தகி, நிகல்யா, நிலவன், தருண்யா, திசாங்கி, ஆரபி, சஷ்டிபிரியா, கதிர்காமன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 26.12.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கொழும்புத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


யாழ் FM முன் ஒழுங்கை,
கொழும்புத்துறை பிரதான வீதி,

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 30953)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 04 . 1945

மறைவு 22 . 12 . 2025

## கதிரேசு சிவஞானம்

**(சிவா டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் பளை, நல்லூர் கிளை, அரியாலை பத்மகலா மன்ற பிரதான இயக்குனர்)**

யாழ் ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர் கிழக்கு ஆசீர்வாதப்பர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓவியர் கதிரேசு சிவஞானம் அவர்கள் கடந்த (22.12.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - நாகமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சடாச்சரம் மற்றும் மகாலிங்கம், மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், ரத்தினாவின் மாமனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆசீர்வாதப்பர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆசீர்வாதப்பர் வீதி,**
**நல்லூர்.**

(CS/60223) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 03 . 1947

மறைவு 22 . 12 . 2025

## வஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (நாயகம்)

இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்கள் கடந்த (22.12.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை - சூசானம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இம்மானுவேல் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மரியபிலோமினா (கமலா) வின் அன்புக் கணவரும், யக்குலின் (பிரான்ஸ்), றொமேல்ட் சுரேஸ்குமார் (Swiss), லேகொட் தினேஸ்குமார் (அதிபர் - யா/ புதுமடம் றோ.க.த.க. பாடசாலை - மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரெரன்ஸ் (பிரான்ஸ்), ரவிலா (Swiss), றொஷானி (Ceylinco life - Atchuvely) ஆகியோரின் அன்பு மாமனும், டிவினேஸ், டிவைஸ்ணவி, சஸ்வின் ஆகியோரின் அன்புமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (24.12.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**பிரதான வீதி,**
**இளவாலை.**

(CS/60252) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**நாஹா மருத்துவ நிலையம்**

கட்டுக்குள் அடங்காத நீரழிவும், இராஜ உறுப்புக்கள் பாதிப்பு, கை, கால் செயலிழப்பு, முள்ளந்தண்டு சிதைவு, ஆஸ்மா, தீராத புண்கள் குணமாக்கும் சிறப்பு மருந்தியல்.
வங்கி முன்லேன்
சாந்தாவத்தை வைரவர் கோயிலடி, மானிப்பாய்.

(CS/60251) J-1

தொடர்புகளுக்கு:-
**077 321 2740**

## ஸ்டார்லிங் செயற்கைக்கோளை தாக்குவதற்கு ரஷ்யா திட்டம்!

உலகப் பணக்காரரான எலான் மஸ்க்கின் ஸ்டார்லிங் செயற்கைக் கோள்கள், உக்ரைனுக்கு உதவுவதால், அவற்றின் மீது தாக்குதல் நடத்த ரஷ்யா திட்ட மிட்டுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

(ம)

# 3ம் ஆண்டு நினைவுதினம்

## வேலுப்பிள்ளை கயிலாயபிள்ளை

(ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் - தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்)



மூன்று ஆண்டுகள் கழிந்ததப்பா நாள்
தோறும் உங்கள் நினைவுகளுடன்
நாங்கள் இங்கே வாழ்கின்றோம்
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் மறையாதப்பா
அப்பா எங்கள் ஆருயிர் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

(CR/46759) J-1

மலர்வு 01.02.1933 உதிர்வு 27.12.2022

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



மலர்வு 20 . 02 . 1942

உதிர்வு 22 . 12 . 2025

## நிவேதிதாதேவி திருநாவுக்கரசு

சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நிவேதிதாதேவி திருநாவுக்கரசு அவர்கள் நேற்றுமுன்தினம் (22.12.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும், வசந்தி, வாசுகி ஆகியோரின் பாசமிகு தாயும், கலைஈசனின் அன்பு மாமியாரும், கலைப்பிரியா, பிரதீபன் மற்றும் சஞ்ஜீவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், பிரவீணா, சஞ்ஜீவனா ஆகியோரின் அன்பு பூட்டியும், காலஞ்சென்ற மங்கயற்கரசி மற்றும் ஒப்பிலா அம்பிகை, காலஞ்சென்ற ஞானபண்டிதன் மற்றும் செகராசசேகரம், ஸ்ரீவித்தியாசாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**சண்டிலிப்பாய் வடக்கு,**
**சண்டிலிப்பாய்.**

(CS/40247) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 9560051**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன்பிடியில் ஈடுபட்டவர் சேற்றில் புதைந்து பலி!
### புத்தூரில் சோகம்!

யாழ்ப்பாணம், டிசெ. 24
யாழ்ப்பாணம் - புத்தூரில் கடல்நீரேரியில் மீன்பிடித்த இளைஞர், சேற்றுக்குள் புதைந்து நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த கமலநாதன் சாருஜன் (வயது-25) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
கடல் நீரேரியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இளைஞர் திடீரென சேற்றுக்குள் புதைந்து காணாமல் போயிருந்தார். இதை அவதானித்த மக்கள் உடனடியாக நீரேரிக்குள் இறங்கித் தேடுதல் நடத்திய நிலையில், நீண்ட போராட்டத்தின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.
சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-66)

## சீனத் தூதுக்குழுவினர் இலங்கை வந்தடைவு

கொழும்பு, டிசெ.24
சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியமான உறுப்பினர்கள் உட்பட 11 பேரைக் கொண்ட சீனத் தூதுக்குழுவொன்று நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளது.
ஸ்ரீலங்கன் விமான சேவைகளுக்கு சொந்தமான விமானம் மூலம் அந்தக் குழு நாட்டை வந்தடைந்துள்ளது.
அவர்களை வரவேற்பதற்காக இலங்கையிலுள்ள சீனத் தூதுவர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க ஆகியோர் விமான நிலையத்தில் வரவேற்பு அளித்துள்ளனர். (ச-இ)

### ஜெய்சங்கரிடம்...

இலங்கைக்கு வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்றுமாலை சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.
இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, தமிழரசுக் கட்சி மீதும், சந்திப்பில் கலந்துகொண்ட இதர கட்சிகள் மீதும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பில் பல விடயங்களை நாங்கள் சுட்டிக்காட்டினோம். குறிப்பாக, இலங்கை இந்திய ஒப்பந்தத்தை தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துநிறைவேற்ற வேண்டும் என்று நாங்கள் அமைச்சர் ஜெய்சங்கரிடம் வலியுறுத்தியுள்ளோம்.
அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துகின்றோம் என்ற போர்வையில், ஒற்றையாட்சிக்குள் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை முடக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகின்றது. எனவே, தமிழர்களின் நிலைப்பாட்டுக்கும் அபிலாஷைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தே தீர்வைக் கண்டடைய வேண்டும் என்பது எங்களின் கருத்தாக அமைந்தது.
ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் கீழ் அதிகாரம் பகிரப்பட்டதால்தான், 13ஆவது திருத்தம் தொடர்பில் உடன்பாடு எட்டப்பட்டு 38 வருடங்களாக அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் நாங்கள் குறிப்பிட்டோம். ஒற்றையாட்சியை நிராகரித்து சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வே எமக்குத் தேவை என்ற கோரிக்கை முன்வைத்தவர்கள் நாம் மட்டுமே.
தமிழரசுக்கட்சியும், ஜனநாயகத் தமிழ்த் தேசிய முன்னணியும் மாகாணத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றுதான் வலியுறுத்தினார்களே தவிர, எவ்வாறான அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று வலியுறுத்தவில்லை. உண்மையில், அவர்கள் தமக்கு வழங்கப்பட்ட மக்களாணையை துஷ்பிரயோகம் செய்துள்ளனர்.
இதேவேளை, தமிழரசுக் கட்சியால் இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜாவிடம் ஆவணமொன்று வழங்கப்பட்டது. அந்த ஆவணத்தில் என்ன உள்ளது என்று எமக்குத் தெரியாது. அது தெரிய வருமோ என்றும் தெரியாது - என்றனர். (அ-ம-26)

### பலாலி...

போதே இவ்வாறு கூறியுள்ளார்.
'யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் முதற்கட்ட அபிவிருத்தி மட்டும்தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஓடுதளத்தை முழுமையாகச் சீரமைத்தால் மட்டுமே கணிசமான பயன்களைப் பெறமுடியும். ஓடுதளத்தை விரிவாக்கினால் பெரிய விமானங்கள் வந்து இறங்கக்கூடிய நிலைமை உருவாகும். இது வடக்கின் அபிவிருத்தியிலும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும்' என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்.
இதையடுத்து, இவ்விடயம் தொடர்பில் இந்தியா இன்னும் ஆழமாக ஆலோசித்து தீர்மானம் எடுக்கும் என்று அமைச்சர் ஜெய்சங்கர் இதன்போது கூறியுள்ளார். (அ-ம-26)

### பெருமளவு...

யப்பட்டுள்ளனர். காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
சந்தேகநபர்களில் ஒருவரிடம் இருந்து 12 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோய்னும், மற்றையவரிடம் இருந்து 2 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டுள்ளன.
சந்தேகநபர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

### ரயிலுடன்...

யாழ்ப்பாணம் - ஆனைப்பந்தி பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணமோகன் (வயது-52) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
மோட்டார்சைக்கிளில் பயணித்த அந்தக் குடும்பத் தலைவர், தண்டவாளத்தைக் குறுக்கறுத்துச் செல்லும் வீதியைக் கடக்க முற்பட்டபோதே ரயிலுடன் மோதி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். விபத்து இடம்பெற்றபோது, ரயில் கடவையில் காவலாளி இல்லை என்றும், இதற்கு முன்னரும் இது போன்ற துயரச் சம்பவங்கள் அந்தப் பகுதியில் இடம்பெற்றுள்ளன எனவும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
விபத்துத் தொடர்பில் பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
இதேவேளை, குறித்த பகுதியில் பாதுகாப்பான கடவையை அமைக்குமாறு கோரி மக்கள் நேற்றுப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். (அ-ம-113-9)

### இந்துக்களுக்கு...

மையிலான குழுவினர் ஆட்சியைக் கைப்பற்றினால், புலம்பெயர் தமிழர்களைத் திருப்திப்படுத்துவதற்காக தமிழர்களின் பகுதிகளில் உள்ள விகாரைகளும், இராணுவ முகாம்களும் அகற்றப்படும் என்று சுட்டிக்காட்டியிருந்தோம். தற்போது அத்தகைய செயல்களே இடம்பெற்று வருகின்றன.
புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கு ஏற்பவே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இனவாதமும், மதவாதமும் நாட்டில் இருக்கக்கூடாது என்பதை நாங்கள் ஏற்கின்றோம். ஆனால், தெற்கில் இந்துக்களுக்கு இருக்கும் சுதந்திரம் வடக்கில் பௌத்தர்களுக்கும் இருக்கவேண்டும் - என்றார். (அ-ம-44)

### இடர்...

களையும் வழங்குமாறு, இந்தியப் பிரதமர் மோடி ஆலோசனை வழங்கியுள்ளார். இலங்கையின் அவசரத் தேவைகளை அடையாளம் கண்டு, அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் இந்தியா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று ஜனாதிபதி அநுரவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
இந்தியாவின் உதவித் திட்டங்களுக்கு ஜனாதிபதி அநுர தனது நன்றியைத் தெரிவித்தார். டித்வா புயலின் பின்னர், மீட்புப் பணிகளுக்கு ஹெலிகொப்டர்கள், மருந்துகள், உணவுப் பொருள்கள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலும், சேதமடைந்த வீதிகளை மீளமைப்பதிலும், மருத்துவமனைகளைக் கட்டியெழுப்புவதிலும் இந்தியா வழங்கிய உதவி அளப்பெரியது என்றும் ஜனாதிபதி அநுர கூறியுள்ளார்.
இலங்கையின் நெருக்கடியான தருணங்களில் இலங்கையை ஆதரிப்பதில் இந்தியா பின்னிற்பதில்லை என்றும் ஜனாதிபதி அநுர இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-44)

### போதைப்...

செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 10 பேரில், 4 பேர் ஐஸ் போதைப் பொருள்களுடனும், 5 பேர் போதை மாத்திரைகளுடனும், ஒருவர் கஞ்சாவுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

### அர்ச்சுனா...

நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது. இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகளுக்கு முன்னிலையாகத் தவறியதைத் தொடர்ந்தே அவருக்கு எதிராகப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

### அத்துமீறிய...

இடையே கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்களே இலங்கையின் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இலங்கை கடற்படையின் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-44)

### மயங்கி...

உயிரிழந்துள்ளார். அவருக்குச் செலுத்தப்பட்ட ஊசியின் பக்க விளைவுகளாலேயே இறப்புச் சம்பவித்ததாக உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.
குகனேசன் டினோஜா (வயது - 12) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
குறித்த சிறுமி மாட்டிறைச்சி உட்கொண்டதன் பின்னர், உடலில் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, தாயாரால் அந்தச் சிறுமி உடனடியாக தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக முள்ளியவளை மாஞ்சோலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். மருத்துவமனையில் ஊசியொன்று செலுத்தப்பட்ட சில நிமிடங்களில் அந்தச் சிறுமி மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார் எனக் கூறப்படுகின்றது.
இதையடுத்தே, ஊசியின் பக்க விளைவுகளாலேயே இறப்புச் சம்பவித்ததாக உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அத்துடன் சிறுமிக்கு உடற்கூறாய்வுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். எனினும், சிறுமியின் இறப்புக்கான காரணம் தொடர்பில் மருத்துவமனை வட்டாரங்கள் உறுதிப்படுத்தவில்லை. (அ-ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்தியத் தூதரகத்தால் நிவாரண உதவிகள்

மன்னார், டிசெ.24

டித்வா புயல் மற்றும் வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்ட மீனவச் சமூகத்தினருக்கு இந்தியத் துணைத்தூதரகத்தால் நிவாரண உதவிகள் மன்னார் மாவட்ட மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதர கத்தின் அதிகாரி சாய் முரளி கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட 150 மீனவக் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கினார். (ச-41-213)

## கிளீன் சிறிலங்கா திட்டத்தின்கீழ் வவுனியாவில் நடமாடும் சேவை

வவுனியா, டிசெ.24

கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் கீழான விசேட நடமாடும் சேவை வவுனியா மாவட்டச் செயலக வளாகத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது. வவுனியா மாவட்டச் செயலகம், வவுனியா வடக்கு பிரதேச செயலகம், வவுனியா தெற்கு பிரதேச செயலகம் ஆகியன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்தன.

நடமாடும் சேவையில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கல், காலம் கடந்த பிறப்பு இறப்பு பதிவு, மனிதவள அபிவிருத்தி தொடர்பான சேவைகள், ஜனாதிபதி செயலகத்தின் பன்முகப்படுத்தப்பட்ட சேவைகள், ஆள்பதிவு திணைக்களத்தின் சேவைகள் உட்பட பொதுமக்களுக்கான பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்துகொண்ட கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலிசமரசிங்க உத்தியோகபூர்வமாக, நிகழ்வை ஆரம்பித்தார்.

நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன், மாவட்டச் செயலர் பி.ஏ.சரத்சந்திர, மேலதிக மாவட்டச் செயலர் நா.கமலதாசன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன் உட்பட திணைக்களங்களின் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டனர். (எ-110)



## மக்கள் சேவையைப் புறக்கணிக்கும் கிராம அலுவலர்கள் மீது நடவடிக்கை

*மன்னார் மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

மன்னார்,டிசெ.24

மக்கள் சேவையைப் புறக்கணிக்கும் கிராம அலுவலர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைய நாள்களில் கிராம அலுவலர்கள் தங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்வதில்லை என்று பொதுமக்களிடம் இருந்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கிராம அலுவலர்கள் ஒரு கிராமத்தின் அபிவிருத்தியில் முக்கியமான பங்களிப்பை ஆற்றி வருகின்றனர். கிராமத்தின் அபிவிருத்தி மற்றும் இடர் இழப்புகள் தொடர்பில் 24 மணித்தியாலங்களும் அவர்கள் பணியாற்றவேண்டும்.

எதிர்காலத்தில் சிறப்பாகச் செயற்படாத கிராம அலுவலர்கள்மீது நடவடிக்கை எடுக்க நாங்கள் தயங்கமாட்டோம் - என்றார். (க-213)

## கிளிநொச்சி-முல்லைத்தீவுக்கான போக்குவரத்து மீண்டும் இணைப்பு

கிளிநொச்சி, டிசெ.22

கிளிநொச்சி-முல்லைத்தீவுக்கான போக்குவரத்துக்கான பாலப் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டதையடுத்து 25 நாள்களின் பின்னர் மீண்டும் இந்த வீதி ஊடான போக்குவரத்து இணைக்கப்பட்டு நேற்றுமுதல் போக்குவரத்து இடம் பெற்றுவருகின்றது.

டித்வா பேரிடர் காரணமாக நடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ-35 பிரதான வீதியில் 11 ஆம் மைக்கல் பகுதியில் அமைந்துள்ள பிரதான பாலம் உடைந்து போக்குவரத்தில் பெரும் பாதிப்பை மக்கள் எதிர்கொண்டனர்.

இதன்காரணமாக கிளிநொச்சி-முல்லைத்தீவுக்கான போக்குவரத்து வட்டக்கச்சி ஊடாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தது.



குறித்த பாலத்தின் புனரமைப்புப் பணிகளை இந்திய இராணுவத்தினர், இலங்கை இராணுவத்தினர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இந்தநிலையில் பாலப் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததையடுத்து இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயசங்கர் காணொலி மூலம் குறித்த வீதியைத் திறந்து வைத்தார். (ச-113)

## சி.வி.கே.சிவஞானமும் சந்திரகுமாரும் சந்திப்பு

கிளிநொச்சி, டிசெ.24

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் மற்றும் ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளர் மு. சந்திரகுமார் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு சமத்துவக் கட்சியின் அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

தற்போதைய அரசியல் நிலைமைகள், எதிர்காலச் செயற்பாடுகள், புதிதாக உருவாக்கப்படவுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-113)

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் பிரதமர் வழிபாடு

கிளிநொச்சி, டிசெ.24

கிளிநொச்சி மாவட்டத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை வருகைதந்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, மாவட்டத்தின் வரலாற்றுப் புகழ்பெற்ற புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்துக்குச் சென்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார். கிளிநொச்சியில் நடைபெற்ற பல்வேறு அபிவிருத்தி மற்றும் மக்கள் நலன் சார்ந்த நிகழ்வுகளில் பங்குபற்றிய பிரதமர், அதன் ஒரு பகுதியாக இந்த ஆலயத்துக்கும் சென்றிருந்தார். ஆலயத்துக்குச் சென்ற பிரதமரை ஆலய நிர்வாகத்தினரும் பொதுமக்களும் வரவேற்றனர். ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளிலும் பங்கேற்றார். வழிபாடுகளைத் தொடர்ந்து, ஆலயத்தின் வரலாற்றுப் பின்னணி, ஐதீகங்கள் மற்றும் சிறப்புகள் தொடர்பில் அங்கிருந்தவர்களிடம் ஆர்வத்துடன் கேட்டறிந்தார். (க-27)



## உணவுப்பொருள் கையளிப்பு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேச மக்களுக்கு உணவுப்பொருள்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. புலோப்பளை கிழக்கு, புலோப்பளை மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 125 குடும்பங்களுக்கே இவை வழங்கப்பட்டன.

புலம்பெயர்நாட்டில்வதியும்விஜயரட்ணம் மனோ குடும்பத்தின் நிதியுதவி யுடன் வை.சற்குணத்தால்நிவாரணப்பொருள்கள் அந்தந்த கிராம செயலகங்களில் வழங்கப்பட்டன. நிகழ்வில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் மற்றும் பிரதேச செயலக அலுவலர்கள் கலந்து கொண்டனர். (எ-41-9)

**வேலையாள் தேவை**

நல்லூரில் அமைந்துள்ள மோட்டார் வாகனம் Service செய்யும் கடை ஒன்றிற்கு Labaur வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
077 004 5391

(CS/60254) J-1

**வீட்டு உதவியாளர் தேவை**

சுன்னாகத்தில் ஆண் முதியவருக்கு துணையாக இரவில் மட்டும் தங்கவேண்டும். வெளிமாவட்டத்தில் இருந்து வந்து இங்கு வேலைசெய்பவர்கள் / படிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-
077 536 7421

(CS/60248) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org